பாதுகாவலன்

PATHUKAVALAN

பாதுகாவலன்

தனிப்பிரதி ரூபா 2/-
தபால் மூலம் தனிப்பிரதி
ஆண்டு சந்தா ரூபா 150/-
வெளிநாட்டு சந்தா
ரூ. 950/- தொகையாகப்
பத்திரிகை பெறுபவர்கள்
ஆண்டு சந்தா முற்பணமாக
செலுத்துவதாயின்
பிரதிக்கு ரூபா 90/-
மட்டுமே.
முகவரி: அ. பெ. இல. 2.
யாழ்ப்பாணம்.

Periodicals
Library

மலர்: 116 இதழ் : 7 2-3-1990 (மார்ச். 2 — மார்ச் 9) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு விலை ரூபா 2/=

## பொதுநிலையினர் இறையியல் கல்வி கற்க விண்ணப்பங்கள் கோரல்

## கொழும்புத்துறை சவேரியார் குருத்துவக்கல்லூரி விரிவுரையாளர் உதவி

# யாழ். நகரில் தமிழருக்கு இறையியல் கல்வி

**இதுவரை பெரும்பான்மை இன கத்தோலிக்கருக்கு வழங்கப்பட்டு வந்த இறையியல் கல்வி, வெகு விரைவில் தமிழ் கத்தோலிக்கருக்கும் கிடைக்கவுள்ளது. வார இறுதி வகுப்புக்கள் மூலம் யாழ். நகரில் பொது நிலையினருக்கு இறையியல் கற்பிக்க புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்கள் உதவியுடன் கல்வி நெறியை ஆரம்பிக்கவுள்ளனர்.**

இலங்கை வாழ் தமிழ் கிறிஸ்தவ பொது மக்கள் ஆழமான இறையியல் அறிவைப் பெற யாழ். மறைவட்டத்தில் உள்ள பொது நிலையினர் கழகம் விரைவில் வார இறுதி வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளது.

தென் இலங்கையில் பெரும்பான்மை இனத்தவர்கள் தம் தாய் மொழியில் இக்கற்கை நெறியை ஆரம்பித்து பல தேர்ச்சி பெற்ற பொது நிலையினருக்கு பட்டமளிப்புகளும் நடத்தியுள்ளனர்.

யாழ். நகரில் இறையியல் கல்வியை முழுமையாகப் பெற்று பரீட்சையில் சித்தியெய்துகின்றவர்களுக்கு, கல்விக்கான கட்டணத்தை மீளளிக்கவும் நிர்வாகிகள் முன்வந்துள்ளனர். ஆர்வமுள்ள பொது நிலையினரிடமிருந்துவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பொதுநிலையினர் கழகம் யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்களின் உதவியை இதற்காகப் பெறவுள்ளது.

(விபரங்கள் பக்கம்7)

## அருட்சகோதரிகளும் திருமணம் நிறைவேற்றல்

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குருக்களோ, தியாக்கோன்களோ இல்லாத மறைத்தளங்களில் திருமண அருட்சாதனத்தை நிறைவேற்றும் அதிகாரத்தைத் தனிப்பயிற்சி பெற்றகன்னியர்களுக்குவழங்க வத்திக்கான் அலாஸ்காவின் அன்கோரேஜ் பேராயர் பிரான்சிஸ் ஹர்லேக்கு அனுமதி அளித்திருப்பதாக அமெரிக்க தேசிய ஆயர் பேரவை தெரிவித்துள்ளது.

## இரு தசாப்தங்களில் பாரிய மாற்றம்

## இலங்கையில் பத்து வீதமாக இருந்த கத்தோலிக்கர் 20 ஆண்டுகளில் ஏழு வீதமாக குறைந்துள்ளனர்

இலங்கை மறைபரப்புப்பணிக்கான தேசிய ஆணைக்குழுவின் தலைவரும் காலி மறைவட்ட ஆயருமான பேரருள்திரு. W. டொன் சில்வெஸ்டர் இலங்கையில் கடந்த இரு தசாப்தத்தில் கத்தோலிக்கரின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றம் பற்றி ஆணைக்குழு கூட்டத்தின் போது குறிப்பிட்டுள்ளார்.

கத்தோலிக்கரிடையே அதிகரித்துள்ள குடும்பக்கட்டுப்பாடு, வெளிநாட்டு குடியேற்றம், அரசியல்பொருளாதார நோக்கங்களுக்காக கிறிஸ்தவத்தை விடுத்து உலகாயுத போக்கைப் பின்பற்றுதல், குருக்கள் பொது நிலையினரிடையே குறைந்துகொண்டு செல்லும் மறைபரப்பு ஆர்வம் என்பன இந்த பாரிய மாற்றத்துக்கு காரணங்களாக முன்வைக்கப்பட்டன.

## தேவிலால் கூற்று?

ஜனவரி மாதத்தில் சென்னைக்கு வருகை தந்திருந்த இந்திய துணைப் பிரதமர் தேவிலாலின் ஒரு கூற்று கிறிஸ்தவர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது

'' இந்தியக் கிறிஸ்தவர்கள் ஐரோப்பாவுக்கோ அமெரிக்காவுக்கோ போகட்டும்'' என்று அவர் கூறியதாகச் சொல்லப்படுகிறது. இது குறித்து மதுரை, மயிலாப்பூர் கத்தோலிக்க ஆயர்கள், பிரதமர் வி. பி. சிங்கிற்குத் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளனர். வட இந்தியத் திருச்சபையும், தென்னிந்தியத் திருச்சபையும் இதுபற்றி ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

ஆனால் துணைப்பிரதமர் தேவிலால் தாம் இவ்வாறு கூறவில்லையென்றும், இது தமது அரசியல் எதிரிகளின் சூழ்ச்சி என்றும் கூறியுள்ளார்.

## மூன்று மாத மறை ஆசிரியர் பயிற்சி

திருமறையின் மறுமலர்ச்சியில் மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் மூன்று மாத மறை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்று வருகின்றன. இயக்குநர் அருட்திரு. சகாயநாயகம் அடிகளார் பல்வேறு இடங்களிலிருந்து வந்த பயிற்சியாளர்களை வரவேற்று நெறியை ஆரம்பித்தார்.

யாழ். ஆயர் தமதுரையில் பயிற்சிக்காலம் குறுகியதாக உள்ளது எனவும் இக்குறுகிய காலத்தில் அதிக விடயங்களைக் கற்கவேண்டியுள்ளது எனவும், இதற்கு ஆசிரியர்களின் உதவியோடு பல்வேறு நூல்களை ஆய்வுசெய்து உன்னிப்பாகக் கற்கவேண்டுமெனவும் அறிவுரை வழங்கினார்.

இவ்வாண்டு ஐம்பத்திரண்டு மாணவர்கள் பயிற்சியை மேற்கொள்கின்றனர்.

இ. கிருபைரெட்ணம்

## தொழுநோயாளருக்கு நிதி

இந்தியா பூனாவில், ஞானதீப வித்தியாபீத்துடன் இணைக்கப்பட்ட நவோதய சமாஷ் குருமாணவர்கள் ஆனந் சிராமின் தொழுநோயாளர் நிவாரணப் பணிக்காக 2 மணி நேர கலை நிகழ்ச்சி நடத்தி நிதி வசூலித்தனர். ஆனந் கிராமின் தலைவர் டாக்டர் இந்து பாத், குருமாணவர்களின் முயற்சியைப் பெரிதும் பாராட்டி, விவிலிய வார்த்தைகளை வாழ்வாக்குபவர்கள் இவர்கள் என குருமாணவர்களைப் பாராட்டினார்.



## அநியாயத் தீர்ப்புகள் அன்றும் இன்றும்

## தவக்காலச்செய்தி

திருத்தந்தை அகதிகளுக்காகவே ஒதுக்கப்பட்ட இந்த ஆண்டிற்கான தவக்காலச் செய்தியில் அகதிகளின் உரிமைகளைப் பேணிக்காக்கும்படி உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். மேலும் அதிகரித்து வருகின்ற வேதனைக்குரிய அகதிகளின் எண்ணிக்கை, உலக நாடுகளின் சில பகுதி

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்கருத்து

## ஆறுதல் தரும் செய்தி

இவ்வாண்டு தவக்காலத்துக்கான திருத்தந்தையின் செய்தியானது ''அகதிகள்'' பற்றியதாகும். திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் அகதிகள் பிரச்சினையை வலியுறுத்தி அதை அனைவரதும் சிந்தனைப் பொருளாகத் தந்துள்ளார்கள்.

உலகின் ஒரு சில பாகங்களில் மட்டுமன்றி எல்லாக் கண்டங்களிலும் பரந்துள்ள அகதிகள் பெருக்கத்தால் ஏற்பட்டுள்ள வேதனைக்குரிய அனுபவங்களை திருத்தந்தை சுட்டிக் காட்டியுள்ளார்.

இடம் பெயர்வு, பாதுகாப்பின்மை, குடும்பங்கள் பிரிக்கப்படுதல், இவற்றால் ஏற்படுகின்ற விரக்தி மனப்பான்மை என்பவற்றை திருத்தந்தை சுட்டிக் காட்டி தாய்நாட்டை விட்டுச் செல்லும் அகதிகளை மற்றைய உலக நாடுகள் வரவேற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்மக்களின் பிரச்சினைகளின் கனாகனத்தை உணர்ந்து, இவர்கள் குடியேறும் நாடுகள் உதவிக் கரம் நீட்டவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கும் திருத்தந்தை ''நான் அந்நியனாயிருந்தேன். என்னை வரவேற்கவில்லை'' (மத். 25: 43) என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளை மேற்கோள்காட்டி ஒவ்வொருவரையும் ஆன்ம பரிசோதனை செய்யும்படி அழைக்கின்றார். அகதிகளாக வரும் அந்நியர்களை அயலவர்களாக மதித்து அவர்களுக்கு அன்புப் பணி புரிய வேண்டும் எனவும் திருத்தந்தை கூறியுள்ளார்.

அகதிகள் என்றவுடன் உலகின் பலபாகங்களுக்கும், குறிப்பாக கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள தமிழ் மக்களே எமது எண்ணத்தில் தோன்றுகின்றனர். பாதுகாப்பின்மை காரணமாக ஏராளமான தமிழ் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளமை எமது அண்மைக்கால வரலாறு.

திருத்தந்தையின் செய்தியானது எம்மவர்களுக்கு ஆறுதல் அளிப்பதாக இருக்கின்றது. அவமானத்துக்கும், ஏளனத்துக்கும் மட்டும் உரியது எமது தமிழ் மக்களது நிலை என்று வேதனைப்பட்டு வெட்கித் தலை குனிந்த நாம் திருத்தந்தையின் கரிசனையையும், கருத்துரையையும் ஆராயும்போது தேற்றப் படுகின்றோம்.

எம்மவர்கள் அகதிகளாக அலைக்களிக்கப்படும் துர்ப்பாக்கிய நிலை மனிதாபிமானத்துடன் நோக்கப்படுகின்றது, புரிந்துகொள்ளப்படுகின்றது என்பதைக் காணும்போது நாம் எதிர்பார்க்கும் ஆறுதலைப் பெற்றுக் கொள்கின்றோம்.

உலகிலுள்ள மனிதாபிமானம் கொண்ட மக்கள் திருத்தந்தையின் அறிவுரைக்குச் செவிசாய்த்து எம்மவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உதவிகளை வழங்குவார்கள் என்பதை எண்ணி இனம் புரியாத ஒரு மகிழ்ச்சியை அடைகின்றோம்.

''அவனியில் அமைதி'' என்ற திருத்தந்தை 23ஆம் அருளப்பரின் சுற்றுமடலை மேற்கோள் காட்டியுள்ள திருத்தந்தை அகதிகளுக்குச் செய்யவேண்டிய உதவிகளைப் பட்டியல் போட்டுக் காட்டியுள்ளார். அகதிகள் தமக்கென குடும்பத்தை அமைத்துக் கொள்ள; தமது குடும்ப அங்கத்தவர்களுடன் மீண்டும் இணைந்து கொள்ள உதவி புரிய வேண்டும்; நியாயமான ஊதியம் பெறவேண்டும்; நிரந்தரமான, மதிப்புக்குரிய தொழில் வாய்ப்பை பெற வேண்டும்; மனிதர் வாழத் தகுந்த இல்லிட வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்; தேவையான சுகாதார கவனிப்புகளுடன் குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் தகுந்த கல்வி வாய்ப்பும் செய்து கொடுக்கப்படவேண்டும் என்பனவே திருத்தந்தையால் இப்போது மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள அகதிகளுக்கான அத்தியாவசிய உதவிகளாகும்.

மேற்கூறப்பட்ட நியாயமான உதவிகள் அகதிகளுக்குக் கிடைக்கப் பெற்றால் அது பெரும் பாக்கியம் என்றே கொள்ளவேண்டும்.

# தேனருவி

### தவக்கால 2ஆம் ஞாயிறு (11.03-90)

## வளர்ச்சிப் பாதையிலே

சிறுவர் சிறுமியரிடம் ''நீங்கள் பிற்காலத்தில் என்னவாக வரப் போகிறீர்கள்'' என்று கேட்டால் நான் டாக்டராகப் போகிறேன். இன்ஜினியராகப் போகிறேன். பாதராகுவேன்... இப்படி ஏதோ தங்களுக்குப் பெரிதாகப் புரிகிறதைச் சொல்லுவார்கள். திறந்த உள்ளத்துடன் பேசும் குழந்தைகளின் வெளிப்பாடு மனித இதயங்களின் எதிரொலி என்பதில் ஐயமில்லை.

வாழ்வில் வளரவும், மிளிரவும் விரும்புவது மனிதருக்கு இயற்கை. அதுதான் ஆண்டவரின் அழைப்பும் கூட. படைத்தவருக்கு மகிமை படைப்புக்களின் சிறப்புத்தானே.

நன்மை தீமைகளைப் பகுத்தறியும் பருவத்தில் மனிதன் தன் வளர்ச்சிக்கான பாதைகளையும் தெரிவு செய்ய அழைக்கப்படுகிறான்.

ஆபிரகாம் அழைக்கப்பட்டார். தமக்கு மட்டுமல்ல, தம் இனத்திற்கே ஒரு பாதையைத் தெரிவு செய்தார். அங்கு இறைவனின் வல்லமையை நம்பினார். தூர நோக்கோடு வாழ்வை எதிர்கொண்டவர் அதனால் பலரின் வாழ்வை மலர வைத்தார். இயேசு உருமாறிய காட்சி இயேசுவுக்காக அல்ல. மாறாக அவரோடு இருந்த இராயப்பர், யாகப்பர், அருளப்பருக்காகவே. இயேசுவின் வாழ்வை மட்டுமல்ல முழுத் திருச்சபையின் வாழ்வையும் பாடுகள், மரணம், துன்பம் அனைத்தையும் கடந்து பார்க்க அழைக்கப்பட்டனர். மரணத்திற்கு அப்பால் உள்ள உயிர்ப்பின் மாட்சிமையைக் கண்டு அதை மனதில் இருத்திட அழைக்கப்பட்டனர். மாட்சியின் காட்சிதான் துன்பங்களையும், சித்திரைவதைகளையும், ஏன், உயிர்துறத்தலையும் தாங்கிட மன வலிமை அளித்தது.

ஒரு கிறிஸ்தவன் தூரப்பார்வையுடையவன். அன்றாட நிகழ்ச்சிகளையும், இவ்வுலக வாழ்வையுமே கடந்து இறைவன் தரும் உயிர்ப்பு வாழ்வையும், நிலையான அமைதியையும், நிறைவான மகிழ்ச்சியையும் அடைய முதலீடு செய்ய அழைக்கப்படுகிறான்.

கிறிஸ்தவன் தன் சொந்தப் பலத்தில் மட்டும் நம்பிக்கை வைக்காதவன். தன் சொந்தப் புத்தியினால் மட்டும் திட்டம் தீட்டாதவன்.

இறைவனுடைய வல்லமை பெற்று தயங்காது முன்னேறும் படி புனித சின்னப்பர் தம் சீடன் திமோத்தேயுவுக்கு ஊக்கமளிக்கிறார். ஆவியின் துணை கொண்டு முன்னே அடியெடுத்து வைக்க வேண்டும்.

தம் சொந்த மண்ணை விட்டு புறப்பட்டுப் போன ஆபிரகாம்: ஒரு புதிய பார்வை கொண்டவர்.

பழமையில் ஊறிய யூத பரம்பரையைப் புரட்சியில் உருமாற்றிய இயேசு: ஒரு புதிய பார்வை கொண்டவர்.

புறஇனத்தவருக்கும் நற்செய்தி உரிமை உண்டு என எல்லைகளைக் கடந்த புனித சின்னப்பர்:ஒரு புதிய பார்வை கொண்டவர்.

நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தூங்கிக் கொண்டிருந்த திருச்சபையை விழித்தெழத் தூண்டிய 23 ஆம் அருளப்பர்: ஒரு புதிய பார்வை கொண்டவர்.

இன்றும் புதிய நோக்கு, புதிய பார்வை கொண்டு வளர்ச்சிக்கான வித்துக்களைத் தமக்கும், திருச்சபைக்கும் விதைக்கும் தலைவர்கள், வழிகாட்டிகள் தேவை.

சுவாமி ஜீவா போல் அ. ம. இ.

| | | |
|---|---|---|
| ஆதி. | 12:1–4 | ஆபிரகாம் அழைக்கப்பட்டார். |
| திமோ. | 1:8–10 | துன்புறத் தயங்காதீர். |
| மத். | 17:1–9 | இயேசு உருமாறினார். |

## குருக்கள் துறவிகளின் ஒருங்கிணைந்த உருவாக்கம்! புதியபார்வை!!

இருபதாம் நூற்றாண்டின் முடிவிலே புதிய சகாப்தத்தின் வரவை எதிர்நோக்கி இருக்கும் திருச்சபை, பலவிதத்திலும் மாறிவரும் உலகத்தின் சவால்களை எதிர்கொள்ள தன்னை முனைப்போடு மீள்ஆய்வு செய்துகொள்ள விரும்புகின்றது. இந்தவகையில் புதிய பார்வையில் குருக்கள், துறவிகளின் ஒருங்கிணைந்த உருவாக்கம் தாய் திருச்சபையின் தலையான கவனத்தை ஈர்ந்திருக்கின்றது. இச் சிந்தனையில் யாழ். மறைமாவட்டத்தில், குருக்கள், துறவிகளின் உருவாக்கத்தில், நேரடியாக தொடர்புடைய சகலருக்காகவும், மாசி மாதம் 18, 19, 20 ஆம் திகதிகளில் தொடர்பகத்தில் நடாத்தப்பட்ட 3 நாள் கருத்தரங்கு சகலதரப்பினராலும் வரவேற்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும்.

குருக்கள் துறவிகளின் ஒருங்கிணைந்த உருவாக்கம், அவர்களுடைய ஆளுமை ஆன்மீக வளர்ச்சியில் ஒரு தொடர்ச்சியான பயணமாகும்.எம்மையே நாம் பரிபூரணமாக ஏற்றுக் கொண்டு, காலத்தின் சவால்களை எதிர்கொள்ள, நற்செய்தியின் மதிப்பீடுகள் ஊடாக, ஒரு தொடர்ச்சியான உள மாற்றத்திற்கு உள்ளாக்க, புதிய பாதையில் ஒருங்கிணைந்த உருவாக்கம் எம்மை அறைகூவி அழைக்கின்றது. கிறிஸ்தவ குருக்கள், துறவிகளின் பணிவாழ்வு, அவர்களுடைய முழுமையான ஆன்மீக, ஆளுமைவளர்ச்சியின் நிறைவில் இருந்து பொங்கிவழியும் ஊற்றேயாகும் என்று, இக் கருத்தரங்கை ஒழுங்குபண்ணி நெறிப்படுத்தியவரும், யாழ். தொடர்பகத்தில், உளவளத் துணை-தொடர்புகளின் இயக்குனருமாகிய செல்வரட்ணம் அடிகளார் தமது தலைமை உரையை தொடங்கிவைத்தார்.

அறிவியல் வளர்ச்சி, புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புக்களின் தாக்கங்கள், துரிதமான தொடர்புசாதன மறுமலர்ச்சி, இவைகள் ஊடாக விரைவாக மாறிவரும் புதியதோர் உலகை எதிர்கொள்ள, திருச்சபை குருக்கள் துறவிகளை தயார் படுத்திக் கொள்ளவேண்டும் என்று புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் தமது உரையில் எடுத்து விளக்கினார். இந்த மண்ணோடும் இதன் கலை கலாச்சார பின்னணிகளோடும், இதன் தனித்தன்மையான பண்புகளோடும் குருத்துவ/துறவற உருவாக்கம் சிந்திக்கப்படவேண்டும் என்று ஜெயசீலன் அடிகளார் தமது உரையில் உள்ளடக்கினார்.

ஜெறோம் லெம்பேட் அ. ம. தி

பொது நிலையினர்கள், குருக்கள் / துறவிகளைப்பற்றி கொண்டிருக்கின்ற கண்ணோட்டத்தையும் எதிர்பார்ப்புக்களையும், பலதரவுகள் எடுத்துக்காட்டுக்கள் வழியாக ஆசிரியர்கள் ஆனந்தராஜா பெர்டினன்ட் மிக சிறப்பாக எடுத்து விளக்கினார்கள்.

முன்வைக்கப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கிய குழு ஆய்வுகளும் / பொது ஆய்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டு பல சந்தேகங்கள் தெளிவுபடுத்தப் பட்டன. இறுதியாக குருத்துவ/துறவற உருவாக்கம் ஒரு பொறுப்பு வாய்ந்த மகத்தான பணி. இந்த உருவாக்கலில்·

(தொடர்ச்சி 7 ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கொரு பாதுகாவலன் · உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# 18. மாக்சிமினும் மற்றவர்களும்

செப்திமுஸ் செவருஸ்
கி. பி. 211 இல் மடிந்துபோனான்.
ஆனால்
அவன் மூட்டிய கலாபனைத் தீயோ
அவன் மடிந்தும் மடியவில்லை.
அவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்து
கி. பி. 2 7 வரை ஆட்சி செய்த
கரகல்லா காலத்தில் தான் அது சிறிது தணிந்தது.
அவனது காலத்திலும்
அவனுக்குப் பின் வந்த
ஹீலியோகபிலஸ் (218 — 222)
மற்றும் அலெக்சாண்டர் செவருஸ் (222 - 235) காலத்திலும்
சட்டங்கள் கடுமையாய் இருந்தாலும்
ஏட்டிலேயே தங்கியிருந்தன;
நாட்டில் நடைமுறையாகவில்லை.
அலெக்சாண்டர் செவருஸ்
கிறிஸ்தவர் பால் அதிக ஆதரவு காட்டினான்.
அரண்மனையினுள் அவர்களை அனுமதித்தான்.
அவன் வழங்கிய ஆதரவு பற்றி
அழகான வழக்கொன்று வரலாற்றில் பதிவாகியுள்ளது.
ஒரு கட்டடத்தை
கிறிஸ்தவர்கள்
தமது வழிபாட்டுக்காக பொறுப்பெடுத்திருந்தனர்.
ஒரு உணவுச்சாலை சொந்தக்காரனும்
அவ்விடத்திற்கே உரிமை கோரினான்.
வழக்கு மன்னனின் மன்றுக்கு வந்தது.
ஒரு இடத்தை
சமையல்காரனின் கையில் கொடுப்பதைவிட,
சகலமும் வல்ல இறைவனை வணங்குபவனிடம் கொடுப்பது சிறந்தது
என்று மன்னன் முடிவு செய்தான்.
ஆனால்
அலெக்சாண்டர் செவருஸ்
கிறிஸ்தவருக்குச் செய்த உதவிகளெல்லாம்
வரலாற்றில்
உபத்திரவங்களாகவே முடிந்தன.
அலெக்சாண்டர்
கி. பி. 235 இல் மாக்சிமினால் கொல்லப்பட்டான்.
மாக்சிமின் அலெக்சாண்டரை எவ்வளவு வெறுத்தானென்றால்
அவன் அன்பு செய்து
ஆதரவு காட்டிய
அனைவரையும் கொல்லத்தேடினான்.
விளைவாக
ஆறாவது பெரும் பொதுக்கலாபனை
கிறிஸ்தவர்மேல் வந்து விடிந்தது.
ஆயர்களும், குருக்களும்
ஆவேசமாகத் தேடப் பட்டனர்.
பாப்பு புனித போந்தியனும்
குருவான புனித இப்பொலிற்றசும்
சாடினியாவிற்கு நாடுகடத்தப்பட்டனர்.
பயணத்திலேயே இறந்த பாப்பு
தான் பயணப்படுமுன்
புனிதத் தலைமையை புனிதர் அந்தேரிடம் ஒப்படைத்தார்.
அந்தேரும் கி. பி. 236 இலேயே வேதசாட்சியானார்.
இவன் வளர்த்த கலாபனை
இவனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த
கோடியன் (238 — 244)
பிலிப்பு (244 — 249)
ஆகியோர் காலத்தில் இறுக்கம் தளர்ந்தது.
பிலிப்பு முதலாவது கிறிஸ்தவ மன்னன்
என்று சொல்லப்படுமளவிற்கு நல்லவனாயிருந்தான்.
படுகொலையின் மூலம்தான்
ஆட்சியை அவன் கைப்பற்றியிருந்தாலும்,
அவன் அதற்காக உண்மையில் மனம்வருந்தினான்.
பெரிய சனியன்று
பாவமன்னிப்புப் பெற அவன் ஆலயம் வந்தபோது,
ஆயரால்
ஆலயத்துக்கு வெளியே தடுக்கப்பட்டு
மனம்வருந்தும் மற்றவரோடு இணையக்கேட்கப்பட்டான்.
அதற்குப் பணிந்து
மன்னன் தன் மனமாற்றத்தை வெளிப்படுத்தினான்.
இவனது காலம்
உண்மையில்
திருச்சபையின் ஒரு சுதந்திரக்காலமே.

— சந்திரன்

## வாசகர் கருத்து:

அன்பின் பாதுகாவலனே!

உன் பணி, உயர்ந்த பணி, உன் இலட்சியம் உயர்ந்த இலட்சியம். உனது சேவை உலகுக்குத் தேவை. இரை தேடும் மீனைப் போல, வாரந்தோறும் உனது வரவை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றேன்.

G. V. அந்தோனி [illegible]
விடத்தல்தீவு.

# மாணவர்களுக்கு ஓர் வழிகாட்டி

## புனித டோமினிக் சாவியோ

இற்றைக்கு நூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன் இத்தாலி தேசத்தில் றிவா என்னும் கிராமத்தில் டோமினிக் சாவியோ என்னும் 15 வயதுச் சிறுவன் பரிசுத்தனாக மரணமடைந்தான். 1954 ஆம் ஆண்டு கத்தோலிக்க திருச்சபை அவனுக்குப் புனித பட்டம் சூட்டி பள்ளிச் சிறார்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக ஏற்படுத்தியது. "டோமினிக் சாவியோ என்னும் 15 வயதுச் சிறுவனைப் பீடமகிமைக்கு உயர்த்தி தற்கால இளைஞருக்கு ஒளி வீசும் மாதிரிகையாக அளிப்பதில் நாம் பேருவகை கொள்ளுகின்றோம்," என்று திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் கூறியுள்ளார். படிக்கும்போது கவனமும், கடமை உணர்வும், சுறுசுறுப்பும் உள்ளவர். துட்டப்பிள்ளைகளை வெறுத்தார், ஆயினும் அவர்களைத் திருத்தத் தெண்டித்தார். மாணவர்களுக்கு ஓர் மேல்வரிச்சட்டமாக விளங்கினார். சொந்த ஊரிலிருந்து வேறு ஊருக்கு கால் நடையாகச் சென்று கற்று வந்தார். சிறு சிறு கருமங்களிலும் மிகுந்த சிரத்தை உடையவர். தான் ஒரு புனிதனாக வேண்டும் என்ற ஆசையும், ஆவலும் பாடசாலையில் படிக்கும் போது அவருக்கு இருந்தது. நான்கு நாட்களுக்கு ஒரு முறை பாவ அறிக்கை செய்யும் பழக்கமுடையவர். ஒரு ஆன்ம குருவைத் தெரிந்து அவரிடமே அவர் பாவ அறிக்கை செய்வது வழக்கம். தேவநற்கருணையில் மிகுந்த பக்தி உடையவர். தேவநற்கருணை பெற முன் அவர் செய்யும் ஆயத்தம் நமக்கு ஓர் எடுத்துக்காட்டு. அதுபோல் நற்கருணை பெற்ற பின் செய்யும் நன்றிக்கும் அளவே இல்லை. விளையாட்டையும், காலை உணவையும் மறந்து இறைவனின் அன்பைப் பற்றியே தியானிப்பார். நற்கருணைச் சந்திப்பிலும் அவர் அதிக நேரத்தைச் செலவிடுவார். சண்டையிடும் மாணவரைச் சமாதானப்படுத்துவார். தன்னைப்போல் மற்ற மாணவரும் கல்வியில் ஊக்கம் காட்ட வேண்டும் என்று புத்தி சொல்லுவார். நற்கருணைப் பக்திக்கு சிறந்த எடுத்துக்காட்டான டோமினிக் சாவியோவை நாமும் பின்பற்றி, தகுந்த ஆயத்தத்துடனும், சுத்தகருத்துடனும், ஆழ்ந்த விசுவாசத்துடனும் நற்கருணையைப் பெற்று அதன் பயனாய் புனித வாழ்வுவாழ முயலுவோமாக!

## நற்சிந்தனை

★ நீ உனது அறிவை அபிவிருத்தி செய்தால் மாத்திரமே அவற்றை வேறொருவனுக்கு கொடுக்க முடியும். நீ இறைவனை அறிந்து அவரை அனுபவித்தால் மாத்திரமே, மற்றவர்களுக்கு அவரை அறிமுகம் செய்ய முடியும்.

# யாழ் மறைவட்டப் பொதுநிலையினர் கழகம்

இக்கழகம் பல ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு 1-2-87 இல் இருந்து புதிய நிர்வாகத்தின் கீழ் இயங்கியது. அதே வருடம் பொதுநிலையினர் கழகங்களுக்கென புதிய யாப்பு யாழ். ஆயரால் தயாரிக்கப்பட்டு கழகத்தின் பரிசிலனைக்கு விடப்பட்டு கழகம் முன் வைத்த சகல மாற்றங்களையும், ஏற்று உள்ளடக்கி 27/3/87 இல் பிரகடனப்படுத்தப்பட்டது. பொதுநிலையினர் கழகங்கள் ஒவ்வொரு பங்கு மட்டத்தில் பங்குக் கழகமாகவும், வட்டாரங்கள் மூன்றினதும் மட்டத்தில் (யாழ், இளவாலை, கிளிநொச்சி) வட்டாரக் கழகமாகவும், மறைவட்டமட்டத்திலும் இயங்குகின்றன.

ஒவ்வொரு பங்குக் கழகத்திலும். அப்பங்கிலுள்ள பக்திச் சபைகளின் நிர்வாக உறுப்பினர்களும் பங்கின் ஒவ்வொரு 500 கத்தோலிக்கருக்கும், ஒருவர் வீதம் பங்குத்தந்தையால் நியமிக்கப்பட்டவர்களும் அங்கம் வகிப்பர். வட்டாரக் கழகத்தில் அதன் கீழுள்ள ஒவ்வொரு பங்குக் கழகத்தின் நிர்வாக உறுப்பினரும், அப்பங்கின் ஒவ்வொரு 1000 கத்தோலிக்கருக்கு ஒருவர் வீதம் பங்குத்தந்தையால் நியமிக்கப்பட்டோரும், பக்திச்சபைகளின் வட்டார மட்டத்தலைவரும் அங்கம் வகிப்பர். மறைவட்டக் கழகத்தில் 3 வட்டாரக் கழகங்களினதும் நிர்வாக உறுப்பினரும், ஒவ்வொரு வட்டாரத்திற்கு இருவர் வீதம் ஆயரால் நியமிக்கப்பட்டோரும் பக்திச்சபைகள், அமைப்புக்களின் மறைவட்ட மட்டத் தலைவர்களும், அங்கம் வகிப்பர். இரு ஆண்டுகளுக்கொருமுறை சகல கழகங்களினதும் அங்கத்தவர்கள் புதுப்பிக்கப்பட்டு நிர்வாகிகள் தெரியப்படுவர்.

சகல கழகங்களினதும் நோக்குகள்; தத்தம் பிரதேச மட்டத்தில் பின்வருமாறு:

1. மறைப்பணிகளை ஊக்குவித்து ஒழுங்குபடுத்துதல்,
2. உலகியல் துறையில் நற்சான்று பகிர்தலை ஊக்குவித்தல்.
3. கத்தோலிக்க நலன்களை ஊக்குவித்துப் பாதுகாத்தல்.
4. திருச்சபையின் பொது நிலையினரின் உரிமைகளை ஊக்குவித்துப் பாதுகாத்தல்,
5. கத்தோலிக்கர் மத்தியில் செயல்முறை ஒற்றுமையை ஏற்படுத்துதல்.

இவற்றையடைய கையாளப் படும் வழிவகைகள்:

1. தேவைக்கேற்ப பொது நிலையினர் மறைப்பணிக் கழகங்களை ஊக்குவித்தல்.
2. பிறமதத்தவரோடு நட்புறவு, நம்பிக்கை, ஒத்துழைப்பை ஊக்குவித்தல்.
3. மனிதமாண்பை வளர்க்க புனிதமான, நீதியான, உண்மையானவற்றை எல்லா

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்.)

# கருணைதனை வேண்டிடுவோம்

பகையிருள் நீங்கி எங்கும்
உற வொளி சுடர்விடவும்
பதட்டங்கள் நீங்கி நாளும்
பணிகளும் தொடர்ந்திடவும்
தாக்கங்கள் நீங்கி எங்கும்
ஆக்கங்கள் ஓங்கிடவும்
காக்கும் இறைவனிடம்
கருணைதனை வேண்டிடுவோம்

காமம் கொலை களவு
கயமை ஒழிந்திடவும்
கடமை உணர்வுகள்
கண்ணியமாய்ச் செயற்படவும்
ஊழல் கலப் படங்கள்
ஓடி மறைந்திட வும்
காக்கும் இறைவனிடம்
கருணைதனை வேண்டிடுவோம்.

தான தருமங்கள் எங்கும்
தழைத்து ஓங்கிடவும்
அன்பு அகிம்சை வழி
அகில மெல்லாம் நிலைத்திடவும்
நீதி நேர்மை வழி
நிறையமைதி பெருகிட வும்
காக்கும் இறைவனிடம்
கருணைதனை வேண்டிடுவோம்.

பஞ்சம் பசிநீங்கி எங்கும்
பசுமை கொழித்திட வும்
பகிர்ந்து வாழ்ந்து மனித
மாண்பை மதித்திடவும்
பண்பில் சிறந்தவர்கள்
பாரெல்லாம் தோன்றிடவும்
காக்கும் இறைவனிடம்
கருணைதனை வேண்டிடுவோம்.

— அ. பீற்றர்ராஜன்
யாழ். மறைக்கல்வி நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமையான ஊமைராகம்

## சிறுகதை

ஒவ்வொரு ஞாயிறு, வெள்ளிக் கிழமைகளிலும் தான் அந்தத் தேவாலயத்தில் பூஜை நடைபெறும். லேகா ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் ஆண்டவருடைய திருச்சுருபத்திற்கு மலர் மாலை அணிவிப்பாள். அந்த ஆலயத்திற்கு முதலில் வருபவள் என்றால் அது லேகா தான். அப்போது தபக்காலமாக இருந்தபடியால் லேகா ஒவ்வொரு நாளும் சென்று சிலுவைப் பாதை சுற்றுவாள். அன்று வெள்ளிக்கிழமை மாலை பூஜையுடன் கூடிய சிலுவைப் பாதை. அவளுக்கு 'இந்த இருபத்திரண்டு வயதிலேயே இப்படி ஒரு பக்தியா' என்று பங்குத்தந்தையே அதிசயப் பட்டிருக்கிறார். அவளுக்கு நாள் பூராவும் ஆலயத்தில் இருப்பது தான் இன்பம், லேகாவுக்கு வீட்டிலே என்ன வேலையிருக்கிறது. கர்த்தரின் காலடியில் அமர்ந்து செபிப்பாள். அவளுக்குக் கடவுள் ஒரே ஒரு குறையைத் தவிர எல்லாம் வாரிவழங்கியுள்ளார், அன்பான பெற்றோர். பாசம் மிகுந்த ஒரே ஒரு அண்ணன். இவள் ஒரு ஊமை என்ற குறையில்லாமல் என்ன விதத்தில் முன்னேற்ற வேண்டுமோ அத்தனையிலும் முன்னேறியிருந்தாள். பொதுவாக எல்லா வாத்தியக் கருவிகளுமே வாசிக்கக் கூடியவள். ஓகன் வாசிப்பதில் மிகத்திறமை வாய்ந்தவள். அவள் ஓகன் வாசிக்கும் போது பெற்றோரும், உடன் பிறப்பும் பூரிப்படையும். ஆனாலும் அவள் மனம் திறந்து பேச முடியாதவள் என்பதை நினைக்கும் போது அவர்கள் மனம் வெதும்புவது நியாயந்தானே!

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

R. கென்றி குயின்மேரி
யாழ்ப்பாண வீதி,
பலாலி, வசாவிளான்.

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

அவளைப் பார்க்கும் எவரும் ஊமை என்று கூறமாட்டார்கள். அழகும், அறிவும், இளமைப் பொலிவும் இறைவன் அவளுக்குக் கொடுத்த வரப்பிரசாதங்கள். அவளிடம் எத்தனை இளைஞர்கள் தூதவரை விட்டுக் காதல் கடிதங்கள் அனுப்பினர் அத்தனையும் உண்மைக் காதலா? ஊமை தான் அவள். உணர்ந்து கொள்ள முடியாதவள் அல்ல. ஊமையின் பாஷைகளை இறைவன் மட்டுமே அறிவார். அவளுடைய மனம் சிதர் சலனம் அடையவில்லை. அன்று வெள்ளிக்கிழமை வழமையாக நேரத்தோடு கையில் மாலையுடன் சென்றாள். அங்கு மறையாசிரியர் சிறுவர்களுக்கு மறைக் கல்வி கற்பித்துக் கொண்டிருந்தார். புதிதாக மறையாசிரியர் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தாள். இன்று தான் நேரில் பார்க்கிறாள். இளம் வயது மறையாசிரியர் 28 வயது மதிக்கலாம். [illegible] அந்த இளம் மறையாசிரியரைப் பார்த்தாள். ஆசிரியரும் படிப்பித்தலை விட்டு ஒரு நிமிடம் அவளைப் பார்த்து விட்டு மீண்டும் படிப்பித்தலில் ஈடுபட்டார். அவளும் ஆலயத்தினுள் சென்றாள், என்றுமில்லாவகையில் அவளுடைய உள்ளம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. அவளுடைய உருவம் மட்டுமே ஆலயத்தில் இருந்தது. உள்ளம்... 'ஓ... யேசுவே' ஏன் எனக்கு இந்த சோதனை? பார்த்தவுடன் அவளுடன் பழக வேண்டும், நித்தமும் அவளைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறதே ஏன் ......? அவள் சென்று மறையும் வரை பார்த்து விட்டுத் தன் வழியே சென்றான்.

வாரங்கள் நான்கு கழிந்தன, அந்த நாட்களில் மைக்கல் லேகாவையே நோட்டம் இட்டான். அவனுடைய உள்ளம் அவளையே சுற்றியது. அவள் யாரைக் கண்டும் சலனம் அடையாத இந்த உள்ளம் இன்று மட்டும் ஏன் ...? ஒவ்வொரு நிமிஷமும் உன் நாமத்தையே உச்சரித்து ஜெபிக்கும் எனக்கு இன்று மட்டும் அது முடியவில்லையே ......... ஏன்? யேசுவே ஏன்? தன்னுள்ளே பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டாள். இறைவன் படைக்கும் போது ஊமைக்கு ஒரு உள்ளம், மற்றவருக்கு ஒரு உள்ளம் படைக்கவில்லையே. அந்த மறையாசிரியன் அவள் அருகில் வந்து அமர்ந்து அவள் கண்களில் வடியும் கண்ணீரைத் துடைத்து ...... "இல்லை ...... இல்லை ...... யேசுவே! என்ன நினைவிது ...... அர்த்தமில்லா ஆசை ... நான் ஒரு ஊமை ... என்னைப் ... போய் ...... ஒரு வேளை நான் நித்தமும் எனக்கு ஒரு அன்பான ... என் ஊமை உள்ளத்தைப் புரிந்து கொள்ளும் துணையைத் தரச் சொல்லி வேண்டினேனே ... அது இதுதானா?" ...... அப்போது ஆலயமணியடித்தது. ஆலயத்துள் மாட்டியிருந்த மணிக்கூட்டைப் பார்த்தாள். நேரம் ஆறு மணியைக் காட்டியது. 'என்ன இது? ...... நேரம் போனதே தெரியவில்லை. திருந்தாதி மணியும் அடித்து விட்டது. பாதர் இன்னும் வரவில்லையே' .......... எழுந்து வெளியே வந்தாள். அவள் வரவுக்காகக் காத்திருப்பது போலமறையாசிரியர் வெளியே நின்று கூறினார். "இன்றைக்குப் பூஜை இல்லை. பாதர் அவசரமாக வெளியே போய் விட்டார். பூஜைக்கு வந்தவர்களுக்கு நான் சொல்லியனுப்பி விட்டேன்." அவன் கூறியதும் அவள் விழிகளாலே அபிநயம் செய்து விட்டுத் தன் வழியே சென்றாள். அதைத் தவிர வேறு எதைச்செய்வாள். மைக்கல் அவள் சென்ற வழியையே அதிசயமாகப் பார்த்து நின்றான். 'இவள் ஒரு வித்தியாசமான பிறவியாக இருக்கிறாளே ...... பூஜைக்கு என்று வந்த பெண்கள் எல்லாம் பூஜை இல்லையென்றதும் என்னுடன் அரட்டை அடித்து விட்டுச் செல்கிறார்கள். ஆனால் இவள் இதுவரையும் ஆலயத்துள் இருந்து விட்டு நான் கூறியதற்கு உம் என்று ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் போகிறாளே ... ஆனால் அவளை எந்தப் பெண்களுடனும் சேருவதில்லை. நித்தமும் ஆலயத்துள் இருப்பதும், செபிப்பதையுமே கவனித்தான். அந்தச் செயல்கள் அவனை மிகவும் கவர்ந்தன, அன்று ஞாயிற்றுக் கிழமை, காலைத் திருப்பலி முடிந்து வந்து, லேகா ஓகனில் 'சிலுவையை நிமிர்ந்து பாராயோ? அதன் புதுமையைக் கொஞ்சம் கேளாயோ?...' என்ற பாடலை மிக அற்புதமாக வாசித்துக் கொண்டிருந்தாள். அவளால் பாடமுடியாவிட்டாலும் அந்த வாத்தியக் கருவி மூலம் இறைவனை மகிமைப் படுத்திக் கொண்டிருந்தாள்.

பாடல் முடிந்தவுடன் அழைப்பு மணிச்சத்தம் கேட்டு எழுந்து கதவைத் திறந்தாள். அவளால் அவள் கண்களையே நம்பமுடியவில்லை, மறையாசிரியன். கையிலே ஒரு பாசலுடன் நின்றான். கூடத் துணைக்கு வந்த ஒரு சிறுவன் அவனிடம்விடைபெற்றுச்சென்றான். "லோறன்ஸ் வீடு...இது தானே அவர் இருக்கிறாரா..?" அவனே கேட்டான் ஆம் என்று தலையசைத்து விட்டு முகபாவத்துடன் உள்ளே அழைத்துச் சென்றாள் லேகா. குரல் கேட்டு பீற்றரும், தாய் பிலோமினாவும் ஹோலுக்கு வந்தனர். "ஓ வாங்கோ!...... நீங்கள் தானே புதிதாக வந்த மறையாசிரியர்...?" பீற்றர் கேட்டான் "ஓ.. நான தான் என்பேர் மைச்கல். லாறன்ஸ் என்றது நீங்களா?... இதைப் பாதர் தந்துவிட்டவர். யாரோ ஒரு நண்பர் கொடுக்கச் சொன்னதாகச் சொன்னவர்" பாசலைக் கொடுத்தான். 'ஓ...அப்படியா... லோறன்ஸ் எங்கடா அப்பா, அவர் வெளியே போய் விட்டார் நான் கொடுக்கிறேன். என் பெயர் பீற்றர்." "நான் இங்கு வரும்போது ஓகன் சத்தம் கேட்டது நல்ல பாட்டு... இந்தக் காலத்திற்கு ஏற்ற பாட்டு... முழுமையாகக் கேட்டேன், யார் வாசித்தது? அருமையாக இருந்தது"...... அவன் கூறியதும் அண்ணன் பீற்றரின் தோள் மீது கை வைத்திருந்த லேகாவின் ஊமை உள்ளம் குளிர்ந்தது. "ஆ...நான் மறந்தேவிட்டேன், உங்களுக்கு அறிமுகப்படுத்த வேயில்லை... [illegible] [illegible] எல்லா வாத்தியக் கருவியுமே வாசிப்பா... இது அம்மா...பேர் பிலோமினா" பீற்றர் அறிமுகப் படுத்தியதும் லேகா குசினிப் பக்கம் சென்றாள். 'உங்கட தங்கச்சியை நான் பல தடவை பார்த்திருக்கிறேன் ஒரே மௌனமாக இருக்கிறா" மைக்கல் கூறியதும் பிலோமினாவின் கண்கள் பனித்தன பீற்றரின் முகத்தில் சோக நிழல்... "அவளுக்கு மௌனம் தான் சொந்தம்... அவள் கதைக்க மாட்டாள். ஊமை"... அவனால் அவன் காதுகளையே நம்பமுடியவில்லை. "இவள் ஊமையா"...??? லேகா தேனீருடன் வந்தாள். மைக்கல் அவளைக் கருணையோடு பார்த்தான். லேகா புன்னகையோடு தேனீர் பரிமாறினாள், பொதுவாக அவள் வருபவர்களுக்குத் தேனீர் போட்டுக் கொடுப்பது இல்லை. பிலோமினாவே செய்வாள். ஆனால் மைக்கலுக்கு மட்டும் அவளே செய்தாள். மைக்கல் மனப்பாரத்துடன் விடைபெற்றான்.

அந்த ஆலயமே விழாக் கோலம் பூண்டிருந்தது. கர்த்தரில் நம்பிக்கை வைத்த எவரும் கைவிடப்படுவதில்லை. இறைவன் எது செய்தாலுமே அது நன்மைக்கே. அவருடைய ஒவ்வொரு செயலும் அர்த்த முள்ளதாகவே அமையும். ஆம் இன்று லேகாவுக்கும், மைக்கலுக்கும் திருமணம். இறைவனின் திட்டம் இது.

(யாவும் கற்பனை)

## யார் எதற்குப் பாதுகாவலர்?

| | | |
|---|---|---|
| தொழிலாளிகள் | — | புனித சூசையப்பர் |
| இதய நோய்கள் | — | புனித இறை அருளப்பர் |
| உடல் ஊனமுற்றோர் | — | புனித றோச் |
| பாம்புக் கடி | — | புனித பத்திரிசியார் |
| தொற்று நோய் | — | புனித செபஸ்தியார் |
| கொள்ளை நோய் | — | புனித ஆரோக்கியநாதர் |
| தொண்டை நோய் | — | புனித பிளாசியுஸ் |
| கண் நோய் | — | புனித பிரகாசியம்மாள் |
| காணாமல் போனதைக் கண்டு எடுக்க | — | புனித அந்தோனியார் |
| மாணவர்களுக்கு | — | புனித தோமஸ் அக்குவினாஸ் |
| பாடகர்களுக்கு | — | புனித சிசிலியம்மாள் |

## அளவாக இருந்து பாருங்களேன்!

1. அளவான மகிழ்ச்சி உன்னை இனிமை உடையவனாகச் செய்கின்றது.
2. அளவான சோதனைகள் உன்னை வலிமை உடையவனாகச் செய்கின்றது.
3. அளவான வருத்தம் உன்னை மனிதத்தன்மை உடையவனாகச் செய்கின்றது.
4. அளவான தோல்விகள் உன்னைப் பணிவுள்ள மனிதனாகச் செய்கின்றது.
5. அளவான நம்பிக்கை உன்னை மகிழ்ச்சி உள்ளவனாகச் செய்கின்றது.
6. அளவான வெற்றி உன்னை ஆர்வமுடையோனாகச் செய்கின்றது.
7. அளவான நண்பர்கள் உன்னை வசதி உள்ளவனாகச் செய்கின்றனர்.
8. அளவான சொத்து உனது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது.
9. அளவான ஆர்வம் உன்னை முன்னேறச் செய்கின்றது
10. அளவான தீர்மானங்கள் உன்னை உன் வாழ்க்கையில் முன்னேறச் செய்கின்றன.

நான்சி துரைரெட்ணம்
கரம்பொன்

## வழியினைத் திறந்திடுவோம்.

உள்ளத்தில் உண்மையை இருத்தி
உறவினருடன் அன்பைப் பெருக்கி
உள்ளமதில் உறவாட
உறவு எனும் பண்பினை
வளர்த்திட எம் மனதினை
திறந்திடுவோம்.........

அன்பர்கள் துரத்திவந்தாலும்
துயரங்கள் நீடித்தாலும்
இதயம் என்னும் கோயிலிலே
அன்பிற்கும், உறவிற்கும்
எம் இதயத்தை திறந்திடுவோம்.

உலக மாந்தரின்
வாழ்வுக்காய் தன்னுயிரை
ஈந்த உத்தமனை
வழிதனில் தொடர
எம் வழிதனைத் திறந்திடுவோம்.

உரும்பிராய்
தி. வி. பிறெட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களே! நிகழ்காலத்தில் வாழுங்கள்




"இன்றைய பொழுது இன்பமாக இருக்கும்போது இன்னும் பிறக்காத நாளைகள், இறந்துபோன நேற்றைய தினங்களைக் குறித்து. நான் ஏன் வருந்த வேண்டும்?" என்கிறார் ஒரு அறிஞர். இளைய தலைமுறையினரின் இன்றைய சிந்தனை நாளை நடக்கப்போவதைப் பற்றி எண்ணுவதிலேயே கழிந்து விடுகின்றது. சிலர் இறந்த கால நிகழ்வுகளின் நடைப்பிணங்களாக வாழ்கின்றார்கள். எமது சமுதாயத்தில் இன்று இளைஞர்கள் ஒரு கேள்விக்குறியாகவே அமைந்து விடுகின்றார்கள். வெளியில் சுதந்திரமாக இளைஞர்கள் செல்லவும் முடியவில்லை, வீட்டினுள் அடைபட்டுக் கிடக்கவும் முடியவில்லை" இது பலருடைய ஏக்கம் நிறைந்த அங்கலாய்ப்பு. "பணமிருந்தால் வெளிநாடு சென்று விடுவேன். அங்காவது ஓரளவு சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியும்" என்பது இன்னும் சிலருடைய ஆதங்கமாகி விடுகின்றது. இன்றைய காலகட்டத்தின் நிகழ்வுகளின் நிஜங்களை சந்திக்க இளம் தலைமுறையினர் பயப்படுகிறார்கள். இதன் விளைவாக விரக்தியான மனநிலைக்கு தள்ளப்பட்டு, எதிலும் பிடிப்பில்லாத ஒரு வாழ்க்கை முறைக்கு தங்களையறியாமலே இட்டுச் செல்லப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். வாழ்க்கையில் எதிர்ப்படும் பிரச்சினையைக்கண்டு சலித்துவிட்டால வாழ்க்கையே சூனியமாகிவிடும். இன்றைய சூழ்நிலைக்கு எல்லோருமே பொறுப்பு என்பதை ஆழமாக மனதில் ஏற்றுக்கொள்ள வேண்டும். போராட்டங்களையும். அதன் விளைவுகளையும் அனுபவித்து விட்டநிலையில் எதிர்காலத்தில் வளமான வாழ்வு அமையுமா என்பது பலருக்கு சந்தேகத்தை உருவாக்கிவிட்டது. இதன் விளைவாக நாளை நடப்பதைப்பற்றி சிந்தித்து கற்பனை உலகினில் தான் சிறகடித்து பறக்கிறார்கள். வாழவேண்டும் என்ற துடிப்பும் உத்வேகமும்தான் பிரச்சனைகளின் வேகத்திற்கும், தாக்கத்திற்கும் ஈடுகொடுத்து நிகழ்காலத்தில் வாழ இளைஞருக்கு அழைப்பு விடுக்கின்றது. வாழ்க்கை என்பது சற்றும் சலனமற்று பரந்து கிடக்கும் நீர்நிலையைப் போன்றது என எண்ணுவது மடமையாகும். பல போர்முனைகளில் ஈடுபட்டுப் போராடி அனுபவங்கள் பெற்று விழுப்புண் ஏற்ற ஒருவன் தான் மாபெரும் வீரனாகத் தலைநிமிர்ந்து நின்று புகழடைகின்றான் நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் வாழ்க்கையில் இத்தகைய பிரச்சனைகள் தோன்றுவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்ற நியதியையும் விளங்கிக் கொள்ளவேண்டும். வாழ்க்கையில் ஒருவித பிடிப்பையும், வாழ்வதிலே ஒரு மகிழ்ச்சியையும் தோற்றுவிப்பது களத்தில் சந்திக்கின்ற பிரச்சினைகள்தான். இளைஞர்களே! இன்றைய வாழ்க்கை அனுபவங்கள்தான் நாளைய விடியலுக்கான அத்திவாரங்கள். நிகழ்காலத்தின் நிஜங்களை மனவுறுதியோடு எதிர்கொள்ளுங்கள் பிரச்சினைகளுக்கு மத்தியில்தான் நாம் வாழ்ந்தாக வேண்டும்; பிரச்சினைகளோடு சேர்ந்துதான் வாழ்க்கையில் வழிநடந்தாகவேண்டும், மனஅமைதியோடும், மகிழ்ச்சியோடும் நாளைய தினத்தை எதிர்நோக்க இளைஞர்களே! பிரச்சினைகளுக்கு உற்சாகமான வரவேற்புக் கொடுங்கள், பிரச்சனைகளின் தன்மை, எத்தகையதாக இருந்தாலும் எதிர்த்து நிற்பதை நியதியாகக் கொள்ளுங்கள், வாழ்க்கைக் களத்தின் இன்றைய அனுபவங்கள் தரும் மனவலிமை மனத்தின் அடிப்படை அமைதிக்கு வழிகோலட்டும்.

றோகான் ஸ்ரனி அன்ரனி
உயிலூர்,

## குருசுழுத்தண்ணையின் கிசு கிசு-58

அடைக்கலம்:- இந்த மாதம் கலியாணம் சனக்க அண்ணை!

குருசுழுத்தண்ண:- அதென்னடா தம்பி இந்த மாதம் தபசுகாலம் எல்லோ. அதுக்குள்ளதான வைக்க வேணுமோ?

அடைக்கலம்:- அதென்னண்ணை செய்யிறது. நல்ல நாள் எல்லாம் அதுக்குள்ள தானே வருகுது.

குருசுழுத்தண்ணை:- எட, எட இப்ப பஞ்சாங்கம் நல்ல நாள் எல்லாம் நீங்கள் தான் மற்றவையளை விட சரியா பாக்கிறியள் ஒழிய, எங்கட சபைய நாட்களை முக்கியமாகப் பார்க்கிறேலப் பாரு. ஆரு எதைக் கடைப்பிடிக்கிறது எண்ட விவஸ்தையே இல்லையா?

## வளமான வாழ்வுபெற...

மனிதன் என்பவன் எளிமையான உள்ளத்தையும், உயர்ந்த எண்ணங்களையும், நல்ல பண்புகளையும்கொண்ட வெள்ளை மனம் படைத்தவனாகவே இத்தரணியில் பிறக்கின்றான். இவன் "நல்லவன் ஆவதும் தீயவன் ஆவதும்" அன்னையின் வளர்ப்பில் தான் தங்கியுள்ளது. கருவறையில் தொடங்கிய வாழ்க்கை கல்லறையில் மறையும்வரை வேதனைகள், சோதனைகள், சாதனைகள், தோல்விகள் என்பன சுழல்சக்கரம் போல் மாறிமாறி ஏற்படுகின்றன. கரடுமுரடான மேடு பள்ளம் நிறைந்த வாழ்க்கையில் மனிதன் விழிப்பாக செயற்படவேண்டும்.

வாழ்க்கை என்பது வாழ்வதற்குத்தான். நாம் எப்படியும் வாழலாம் என்பதை விட இப்படித்தான் வாழவேண்டுமென்று சில முறைகளை அமைத்து வாழ்ந்து வருவோமாகில் அதுவே வாழ்க்கையின் தத்துவமாக அமைந்து விடுகின்றது. மானிட வாழ்க்கை குறுகியது. இருந்தாலும் அதனை இனிமையாக்குவதும், கசப்பாக்குவதும் நம் ஒவ்வொருவரின் செயற்பாடுகளில் தான் தங்கியிருக்கின்றது. நிலையற்ற எம் வாழ்க்கையில் நிலையானவற்றை நாம் இத்தரணிக்கு செய்யவேண்டும். நாம் ஒவ்வொருவரும் தனித்தனி ஆற்றல்கள் சிந்தனைகள், திறமைகள், பண்புகளைக் கொண்டவர்களாக இருக்கின்றோம். இவையனைத்தும் கடவுள் நமக்கு கொடுத்த அரும் பெரும் கொடையாகும். எனவே இவற்றை நாம் வளர்ப்பதால் எமது வாழ்வையும் நாம் வளர்க்கமுடியும்.

இளமை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒர ஒரு தடவை கிடைக்கப்பெறும் காலமாகும். இக்காலத்தில் இளைய தலைமுறைகள் ஒவ்வொருவரும் தமது குறிக்கோள்களைத் திட்டமிட்டுக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். வாழ்வை வளப்படுத்த குறிக்கோள் முக்கியமானதாகும். நாம் எமது குறிக்கோள்களைத் தெரிவு செய்யும்போது எமது ஆற்றல், அறிவு என்பவற்றிற்கு அமையத்தெரிவு செய்யவேண்டும். குறிக்கோளை நிறைவேற்றுவதில் இடைஞ்சல்கள் கஷ்ட துன்பங்கள் என்பன குறுக்கிட்டாலும் நாம் அவற்றை கவனத்திற்கு எடுக்காது உறுதியுடன் இருக்கவேண்டும்.

வாழ்க்கையின் முன்னேற்றம் என்பது மனித முயற்சியில் தான் தங்கியிருக்கின்றது முயற்சித்தால் செய்யமுடியாதது என்று ஒன்றும் இருக்கப்போவதில்லை "முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்" என்பது போல எமது முயற்சியும், உழைப்பும் ஒருபோதும் வீணாகாது எமது வாழ்வில் வாழ்வை வளப்படுத்தி சமூகத்தை முன்னேற்ற முயற்சிப்போம். இச்சமூகம் எமக்கு என்ன செய்தது என எண்ணாது சமூகத்திற்கு நான் என்ன செய்தேன் என சிந்தித்து பயனுள்ளவற்றையே செய்து வளம் பெறுவோமாக.

மாதகலூர், மா. ஜெறி.




உங்கள் கனவுகளை நனவாக்குங்கள் என்ற பகுதியின் 5 ஆம் கட்டுரையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தப் பகுதிபற்றிய பலரின் கருத்துக்களைப் பெற்றோம் எல்லாக்கருத்துக்களும் பொதுவான கருத்துக்களாகவே உள்ளன தனிப்பட்ட உங்கள் கனவுகளை நனவாக்குங்கள்- என்ற கட்டுரைக்கு கருத்துக்கள் அதிகம் வரவில்லை. தொடர்கின்ற பெரிய கட்டுரை என்றபடியால் சற்று இரசிக்க கடினமாக இருக்கலாம்.

தொடர்ந்து வாசிப்பவர்கள் இதன் சுவையையும், வாழ்க்கைக்கு இதன் முக்கியத்துவத்தையும் நன்கு உணர்வார்கள்.

பல கட்டுரைகளைப் பலரும் அனுப்பி உள்ளார்கள். எல்லாம் மீண்டும், மீண்டும் எழுதப்பட்டவற்றையே பெயர் பிரசுரிக்கப்பட வேண்டும் என்று எழுதியது போல் தோன்றுகிறது. முதிர்ச்சியடைந்த மனிதன் யார்? என்ற 5 ஆம் கட்டுரை ஒரு உளவியல் தேர்வாகும்.

முதிர்ச்சியடைந்த மனிதன் ( ) கனவு உலகில் வாழமாட்டார். (2) சுய பாதுகாப்பைப்பற்றிய உணர்வுடையவராக இருப்பார் (3) விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மை உடையவராக இருப்பார். (4) தன் சூழலின் தேவைகளைத் திருப்திப்படுத்துபவராக இருப்பார் (5) உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும், சுலபமாக வெளிப்படுத்தவும் கூடியவராக இருப்பார். (6) நல்ல உறவுகளைக் கொண்டிருப்பார் என்ற கருத்துக்களைப் பார்த்தோம். இதன் மிகுதியை இப்போ பார்ப்போம்,

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை


8. தான் ஒரு முழுமையான மனிதன் என்று உணருபவராயும், தன்னைத் தானே மதிப்பீடு செய்து கொள்பவராயும், வாழ்க்கையில் தனது பொறுப்புக்களை இனங் கண்டு, தனது ஆளுமைக்கு இன்றியமையாத தனது மனச்சாட்சியை நன்குணர்ந்து நடப்பவராயும், தனது வாழ்க்கைமுறை தனது சமுகத்துக்கும், தனக்கும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்ற சிந்தனையும், வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உயர் மனப்பான்மையும், சமுதாயத்தில் தனது வாழ்வு அர்த்தமுடையதும் பயனுடையதும் என்ற உணர்வும் உடையவர் அவர்.

பொதுவில், ஒருவனது வளர்ச்சியும், கல்வியும், நல்லமுறையில் அமையுமாயின், அவனுடைய உள, உடல் பூரணத்துவம் பெற அதிக பிரயாசை தேவைப்படாது. உடல் முதிர்ச்சியடைந்து விட்டால் அவனது ஆற்றலும். வலுவும் மற்றையோருக்குப் பயன்படவேண்டும். ஆனால் முற்காலத்தில் தனி ஒருவர் தனக்கு உதவுவதற்கே தன் சக்தியைச் செலவிடவேண்டியவராயிருந்தார். தற்போது பிறர்நலனும். அன்பும், முழுமையும் முதிர்ச்சியும் அடையும் போக்கின் வெற்றிகரமான விளைவுகள் என்றே கருதப்படுகின்றன.

**முதிர்ச்சியின் உயர்நிலையில் உள்ளவர்கள் பின்வரும் கூற்றுகளுக்கு 'ஆம்' என்று பதில் கூறுவார்கள்;—**

1. இவரிடம் நம்பிப் பொறுப்பிக்கப்பட்ட பணியை இவர் நன்றாகச் செய்வார் என்ற நம்பிக்கை உணர்வுடன் பிறர் என்னிடம் பொறுப்புக்களை ஒப்படைப்பார்களா?
2. மற்றவர்கள் இவர் ஒரு விசுவாசமான நண்பர்; பயனுள்ள ஆலோசனை பெறுவதற்கும், கஷ்டமான சந்தர்ப்பங்களில் உதவி பெறுவதற்கும் இவரை நம்பலாம் என்று கருதப்படுகின்றனா?
3. பிறர் என்னை நேர்மையானவன், உண்மையுள்ளவன், சேர்ந்து வாழவும், கூடிவேலை செய்யவும் ஏற்றவன் என்று கருதுகிறார்களா?
4. கணநேர உணர்ச்சிகளால் வயப்படாமலும், காரண காரியங்களை நன்கு ஆராய்ந்த பின்னரே நான் தீர்மானங்களை எடுக்கின்றேனா?
5. மதிப்புயர்ந்த நீண்டகால தொலைநோக்குள்ள இலட்சியங்களுக்காக அற்ப இன்பங்களையும், இலாபங்களையும் தியாகம் செய்ய நான் தயாராய் இருக்கின்றேனா?
6. பிறருடன் நிகழும் வாக்கு வாதங்கள், சர்ச்சைகளில் நான் சில உண்மைகளைக் கவனிக்காமல் விட்டேன் என்றோ, எனது நோக்கில் ஒருதலைப்பட்சமாய் இருந்தேன் என்றோ நான் மனதார ஏற்றுக் கொள்வேனா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமறைப்பணி நிலையம், த. பெ. இல. 2, யாழ்ப்பாணம்.

## நற்செய்திக்கோர் பின்னணி (4)

நற்செய்தி நூல்களின் பொதுவான நோக்கம்:- (ஆ)

நற்செய்தியாளரை "ஆசிரியர் என்று கூறுவதைவிட "தொகுப்பாளர்" என்று சொல்வதே பொருத்தமாகும். எந்த நற்செய்தியாளரும், தானே தந்துள்ள நற்செய்தியை தானே முழுமையாகத் தன் கைபட எழுதவில்லை. நற்செய்தி நூல்கள் உருவாகும் முன்னரே கிறிஸ்துவைப் பற்றிப் பல நூல்கள் இருந்தன. நற்செய்தியாளர்கள் திருச்சபையின் பொது நன்மைக்காக நற்செய்திகளை எழுதிய போதிலும், தாங்கள் எழுதவேண்டிய சூழ்நிலையில் தனிப்பட்ட நோக்கங்களுக்கேற்ப பாரம்பரியங்களில் வழங்கப்பட்டவைகள், ஏற்கனவே எழுதப்பட்ட நூல்களில் சிலவற்றைப் பொறுக்கி எடுத்து இன்னும் சிலவற்றைத் தொகுத்து இவற்றிற்கு திருச்சபையின் நிலைமைக்கேற்றபடி விளக்கமும் தந்தனர்.

இவ்விதமாக நற்செய்தியானது ஆண்டவர் இயேசுவிடமிருந்து அப்போஸ்தலர்க்கும், அப்போஸ்தலர் வழியாக அவர்கள் போதனைகள் விளக்கம் ஆகியவற்றோடு நற்செய்தியாளர்களுக்கும் அளிக்கப்பட்டது. நற்செய்தியாளர்கள் தாங்கள் வாழ்ந்த சூழ்நிலையில் உள்ள மக்களுக்கு இறையரசைப் பரப்ப அதாவது கிறிஸ்துவை அவர்களிலே நிலைநாட்ட தாங்கள் கிறிஸ்துவை அறிந்து கொண்ட முறைக்கேற்ப ஏற்கனவே அவரைப் பற்றி நிலவிய வழிவழிச் செயல்களை வகுத்தும், பிரித்தும், இணைத்தும்- நெறிப்படுத்தியும் கிறிஸ்துவின் மறையுடலை அவர்களிலே வளர்த்தெடுப்பதற்கேற்ப தமக்கே உரிய பாணியில் செய்திகளை இணைத்தனர். நிகழ்ச்சிகளைக் கோர்த்தனர். சில கருத்துக்களை வலியுறுத்தினர். இயேசுவின் வாழ்க்கையில் சில கட்டங்களை மேலோங்கச் செய்தனர். இவ்விதமாக எழுதப்பட்ட நற்செய்திகளில் "நான்கு நூல்கள்" உண்மையானதாகவும், அதிகார பூர்வமானதாகவும் திருச்சபையானது ஏற்றுக்கொண்டது. அவை மத்தேயு, மாற்கு, லூக்காஸ், அருளப்பர் ஆகியன. இவர்களில் முதன் முதலில் நற்செய்தியென்ற ஒரு இலக்கிய உருவையே உருவாக்கியவர் நற்செய்தியாளர் மாற்கு தான்.

— எஸ். அந்தோனிப்பிள்ளை.

அறிந்துகொள்ளுங்கள் (101)

## வரலாற்று அரசியல் பின்னணி

முன் வரலாறு:-

மன்னன் தாவீது, சலமோன் ஆகியோரின் கீழ் சிறந்து விளங்கிய யூதேயா அரசு பிற்காலத்தில் சீரழிந்து அழிவுற்றது. இதற்குக் காரணம் யூதர்கள் தங்கள் மூதாதையர் வழிபட்டு வந்த ஒரே கடவுளை மறந்து புறஇனத்தாரின் தெய்வங்களை வழிபட்டதே. நாடு இரண்டாகப் பிரிந்தது. இருநாட்டினருக்குள்ளும் போட்டி, பெருமை, நம்பிக்கைத் துரோகம், அதிகாரப் பேராசை போன்றவற்றால் நாடு இழிநிலைகளுக்கு உள்ளாகி அசீரியர், பபிலோனியருக்கு அடிமையாயினர். ஜெருசலேம் நகரமும், தேவாலயமும் அழிக்கப்பட்டது.

பல ஆண்டுகளின் பின் பாரசீக மன்னன் சைரஸ் ஆட்சியில் யூதர்கள் விடுதலை பெற்று திரும்பிவந்து நகரைக்கட்டி தேவாலயத்தை எழுப்பி விழாக் கொண்டாடினர். (கி.மு. 537 இல்) ஆனால் இப்பொழுது அரசியல் சுதந்திரமோ, முழுமையான மதச்சுதந்திரமோ அவர்களுக்கு இல்லை. இந்த நிலைமையை வெறுத்த மக்கள் மக்கபேயர்களின் தலைமையின் கீழ் எழுச்சி பெற்று தங்கள் அடிமைத்தனத்தை அறுக்கப் போராடினர். வெற்றியும் பெற்றனர். மதச்சுதந்திரமும், அரசியல் சுதந்திரமும் பெற்றனர். இதன் விளைவாக யூதேயாவில் ஹாஸ்மோனியரின் பரம்பரை நிறுவப்பட்டது. மக்கபேயர்கள் கடவுளின் கற்பனைக்குப் பணிந்து நடந்தனர்.

மதப்பற்றும், நாட்டுப்பற்றும் வளர்ந்தது. மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.

ஆனால் மக்கபேயரின் சந்ததியினர் நாட்டின் எல்லையை விரிவுபடுத்துவதிலும், தமது அரசியல் செல்வாக்கை நிலை நிறுத்துவதிலும் கருத்தாயிருந்தனர். அவர்களிடம் மதப்பற்று சிறிதும் இல்லை. தமது நடவடிக்கைகளினால் மக்களை வெறுப்படையச் செய்தனர். கிரேக்கப் பண்பாட்டை யூதமக்களிடையே புகுத்த முயன்றனர். இவர்கள் அரசபட்டமும் தங்களுடையதாக எடுத்துக் கொண்டனர். இவ்வளவிற்கும், அவர்கள் தாவீது பரப்பரையோ, லேவியின் பரம்பரையோ இல்லை. ஹாஸ்மோனியப்பரம்பரையினர் பரிசேயரைக் கொடுமைப்படுத்தி சதுசேயரை ஆதரித்தனர்.

இதனால் உட்பூசலும், உள்நாட்டுப் போரும் மூண்டது. இக்குழப்பத்தினால் இருசாராரும், உரோமை அரசின் உதவியை நாடினர். அதன் பயன் யூதர்கள் உரோமை அரசுக்கு அடிமையாயினர்.

இ. ம. ஜெயசீலன்.

## விற்பனை நிலையம்

நெடுந்தீவுப் பங்கில் சிறப்பாக செயலாற்றி வருகின்ற புனித வின்சென் டி போல் தர்ம சபையின் விற்பனை நிலையம் நெடுந்தீவுப் பங்குத் தந்தை வண. பிதா அருள்திரு. M. M. V. அமிர்தகுமார் அடிகளும், முன்னாள் பங்குத்தந்தை வண. பிதா அருள்திரு. ஜெறோம் லெம்பேட் O. M. I. அடிகளாரும் 1988 மார்கழி 30 இல் அத்திவாரக் கல் நாட்டி ஆரம்பித்து வைத்தனர். இம்மாதம் 2 ஆம் திகதி அவ்விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இத்திறப்பு விழா வைபவத்திற்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் சங். சகோதரி லொறன்ரீனா அவர்களும், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக பதில் கடமையாற்றுகின்ற பதவிநிலை உத்தியோகஸ்தர் திரு பி. நீக்கிலாஸ் அவர்களும், பங்கின் பக்திச்சபையின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பங்குத் தந்தை அருள்திரு M. M. V அமிர்தகுமார் அடிகள் சிறப்புரை வழங்கிய போது போக்குவரத்து வசதிகளால் பின் தங்கிய இக்கிராமத்தில் இந்நிலையமானது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் பயன்படும் என நம்பிக்கை தெரிவித்தார்

தகவல்: ய. தேவதாஸ்.

## யாழ் மறைவட்ட...

(3 ஆம் பக்க தொடர்ச்சி)

மனிதரோடும் சேர்ந்து வளர்த்தல்.

4 குடியியல் பொறுப்புக்களை தனித்தும், ஒருமித்தும் நிறைவேற்ற ஊக்குவித்தல்.

5. அரசோடு அமைதி, நீதி, இணக்கம், சார்பாக ஒத்துழைத்தல்.

6. பொதுநிலையினரின் விழிப்புணர்வை வளர்த்தல்.

பழைய யாப்பின்படி 1987 இல் ஆரம்பித்த மறைவட்டக் கழகம் தனது பதவிக்காலத்தை 88 மார்கழியில் முடித்துக் கொண்டது. அதன் சில செயற்பாடுகளாவன.


1. யாழ் மறைவட்ட சேமலாப நிதிச் சங்கத்தை நிர்வகிக்க வழிசெய்தல்.

2. மக்களினதும், திருச்சபையினதும் நலன், தேவை கருதி அரசின் அமைப்புக்களுக்கோ, திருச்சபைத் தலைவர்களுக்கோ தேவைக்கேற்ப சில மகஜர்களை அனுப்பியமை.

3. பிரயோசனமான தலைப்புக்களில் வெளியாரைக் கொண்டு உரைகளை ஆற்றுவித்தல், கலந்துரையாடல், கருத்தரங்குகளில் பங்குபற்றுதல்.

4. பங்குக் கழகங்களையும், வட்டாரக் கழகங்களையும் ஊக்குவித்தல் போன்றன. எமது மறைவட்ட இறைமக்கள் யாவரும், இக் கழகத்தின் செயற்பாடுகளில் பங்குகொள்ள அழைக்கப்படுகின்றனர்.

அ. சந்தியாப்பிள்ளை, செயலர்.




| | |
|---|---|
| ஒளி: 4 | எம் விழிகளின் ஒளி யேசு |
| சுடர்: 7 | எம் வாழ்வின் வழி யேசு |

## தவக்காலம்

**விழி வழி !**

இறையேசுவை எம் மீட்பராகக் கொண்ட நாம், அம் மீட்பரைப்பற்றி தவக்காலம் வரும்பொழுது ஆழ்ந்து சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

"இம் மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர். அவர்கள் உள்ளமோ என்னை விட்டுத் தொலைவில் இருக்கின்றது" (மத்தேயு 15: 8)

இந்த வார்த்தைகளைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள். ஒவ்வொருவரும் மற்றவரின் சொல்லையும், செயலையும் ஆய்வு செய்வதை விட்டுத் தம்மைத் தாமே ஆய்வு செய்யும் பொழுது நம் அருள் நாதரின் வார்த்தைகளின் பொருள், சக்தி மிக்கதாகிறது. அக இருள் அகல ஒளி ஏற்றப்படுகிறது.

நமது உள்ளமும், எண்ணங்களும் ஒருங்கே இணைந்து அமைதியான உள்ளத்தோடு இறைவனோடு உரையாடும் போது செபம் ஒரு இறை அனுபவமாகிறது. தூய ஆவியின் ஏவுதலை நம் உள்ளம் உணரும்போது எம்மால் இறை யேசு வழி செல்வது இலகுவாகி விடுகிறது. தவக்காலம், உள்ளம் இறை யேசுவை உணர்ந்து உருகும் காலம். உணருங்கள், உருகுங்கள். அவர் வழி செல்லுங்கள்.

அன்பின்
அன்புவிழி,

### அங்கத்துவம்:

274 S. அருள்சிலிபீசிஸ் 11 பற்றிமா, ம. வி. பேசாலை.
275 V. வெர்ஜீன் பெர்னாண்டோ 6 அ. த. க. பா. தலைமன்னார் பியர்.
276 ம. யூறிஸ்ரா 11 ம. ம. வி. புங்குடுதீவு.
277 G. P தேவராஜ் 11 புங். ம.வி. புங்குடுதீவு.
278 எ. நோயலின் செல்வமணி கூஞ்ஞ 7 புனித ஆனாள் ம.வி. வங்காலை.
279 A யோகவதி 11 உயிலங்குளம், றோ க. த. க. பா.
280 S. எட்வேட் குயின்ரன் 11 புனித சவேரியார், ஆ. ம. வி. மன்னார்.

* * *

### கௌரவ அங்கத்துவம்

A 36 P. ஆன்ட நீறறாகுட் 12 நானாட்டான், ம. வி.
A 37 அ. தீபன் யேசுதாசன் 12 ஸ்கந்தவரோதயாக்கல்லூரி. சுன்னாகம்.
A 38 R. றூபி 6ஆம் வட்டாரம், நெடுந்தீவு.
A 39 யா. டென்சி ,, ,, ,,
B 40 வி. ஜெயபால் 53-1ஆம் குறுக்குவீதி மணிப்புரி, கொழும்புத்துறை.

### போற்றிடுவோமே

பாலயேசு தாய்மரியை போற்றிடுவோமே—ஜென்ம
பாவமற்ற தூயவளைப் போற்றிடுவோமே
நீலவான நாயகியைப் போற்றிடுவோமே—பொங்கும்
நேசவாஞ்சையோடு நாளும் போற்றிடுவோமே.

சாவழித்துயிர்த்த தாயை போற்றிடுவோமே—பேயின்
சத்துவம் அழித்த தாயைப் போற்றிடுவோமே
பாலியை அணைக்கும் தாயை போற்றிடுவோமே—திங்கள்
பாதமே மிதித்த தாயைப் போற்றிடுவோமே.

சூசை மாதவன் மணந்த தாயைப் போற்றிடுவோமே—அன்பு
மாமலர் சொரிந்து தாயைப் போற்றிடுவோமே
ஆதவன் அணிந்த தாயைப் போற்றிடுவோமே—கோடி
அற்புதம் புரிந்த தாயைப் போற்றிடுவோமே.

பூதலம் செழிக்கத் தாயைப் போற்றிடுவோமே—நல்ல
புண்ணியம் கொழிக்கத் தாயைப் போற்றிடுவோமே
சோதனை தவிர்க்கத் தாயைப் போற்றிடுவோமே—என்றும்
சொர்ண திருதாழ்பணிந்து போற்றிடுவோமே.

உன்னத பிதா மகிழ போற்றிடுவோமே—ஞான
ஊறணியைப் பூரணியைப் போற்றிடுவோமே
மன்னவர்க்கு மன்னவனார் மாளிகையில்—கூடும்
மாசபையும் சித்தியுற போற்றிடுவோமே.

H. ஜெனோவா
ஆண்டு 11, அ. எண். 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா? போட்டி-31

பாதுகாவலன் பத்திரிகையில், இதழ் 1 தொடக்கம் இதழ் 5 வரை வினாவுக்குரிய சரியான விடையைக் கண்டு பிடித்து வினா இலக்கத்தையும், சரியான விடையையும் தெளிவாக எழுதி 30-3-90 ற்கு முன் "பாதுகாவலன்" அ. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

**பரிசு ரூபா 25/-**

**வினாக்கள்**

1. உயிரின வாழ்க்கைச் சூழல் பிரச்சினை மட்டில் சமய நம்பிக்கையற்ற மக்கள் கூட கொண்டுள்ள கடமைப்பாடு என்ன ?
2. யோசப்வாஸ் முனிவரை "ஆசாரத்திற்குரியவர்" என்று திருச்சபை உத்தியோகபூர்வமாக அறிக்கையிட்டது எப்போது ?
3. நற்செய்தியில் யேசுவின் எதிர்பார்ப்பு என்ன ? உண்மையான எளிமை எதைக் குறிக்கின்றது ?
4. இவ்வாண்டு கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்திற்கான அருளப்பர் நற்செய்தியின் 17ஆம் அதிகாரத்திலுள்ள யேசு பிதாவிடம் வேண்டிய செபம் குறிக்கும் "கருப்பொருள்" யாது ?
5. புனித பொலிகாப் எந்த நகரின் ஆயராவார் ?
6. முன்பு வேதத்தை மறுதலித்தவர்களே, பின்னர் வேத சாட்சியாக மரிக்கக் காரணமாயிருந்த புனிதை யார் ?

**போட்டி 30 சரியான விடைகள்**

1. வளர்ந்தோருக்காகக் கொடுக்கப்பட்டது.
2. புனித பேர்க்மான்ஸ் அருளப்பர்.
   புனித மாட்டீனார்.
3. ஏழ்மை, தனிமை, ஏமாற்றம், ஏக்கம் போன்ற பிரச்சனைகளே மக்கள் மனதில் விரக்தியையும், அங்கலாய்ப்பையும் உண்டாக்கக் காரணிகளாய் அமைகின்றன.
4. மீட்பின் வரலாற்றிலே நடந்தேறிய நிகழ்வுகளின் உட்பொருளைத் தியானிக்கவும், அவை கூறும் அறிவுரைகளை உணர்ந்து கொள்ளவும், திருச்சபையின் அங்கத்தவர்கள் கடமைப்பட்டுள்ளனர்.
5. நேர்மை, திறந்த மனப்பான்மை, சூதுவாதில்லாத எளிய மனம்.
6. மற்றவரை அடக்கி ஒடுக்கும் எவரும் இறைவனது தீர்ப்பிலிருந்து தப்பமுடியாது என்கிறார்.

பரிசுபெறும் நற்பேறாளர்:-
L. R. கொன்ஸ்ரன்ரைன்.
873, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப் பெறுவோர்:-

1) றோசறி, மெற்றில்டா, லெம்பேட். 2) இ. பற்றிஷியா பீரிஸ், 3) அ. யூட் செல்வராஜ் லெம்பேட், 4) ச. இம்மானுவேல் லெம்பேட், 5) இ. ஆன் அன்ரனிற்றா லெம்பேட், 6) இ. பெலிசிற்றா றமணி.

## மக்கள் குரல்

தோமஸ் முனிவரைப் பற்றி மக்கள் நன்கு அறிந்து அவரின் புனிதர் பட்டத்துக்காக இறைவனை மன்றாட பாதுகாவலன் முழு மூச்சாக செயற்படவேண்டும். தமிழ் இனத்துக்கே அவரால் பெரும் பெருமை வரப்போகின்றது. ஏழு கோடி தமிழர்களும் வித்தியாசமின்றி அவரைப் போற்ற வேண்டும்.


மேலும், ஆசாரத்துக்குரிய யோசேப் வாஸ் அடிகளாரைப் பற்றியும் வட பகுதியில் கூடிய அக்கறை விசுவாசிகளுக்கிடையே இருப்பதாகத் தெரியவில்லை. சில்லாலையூர் கிறிஸ்தவர்களே முழுமூச்சுடன் அவரை மகிமைப்படுத்தப்பாடு படுகின்றனர். நாளாந்தம் மன்றாடுகின்றனர். அவர்களைப் போல நாம் ஒவ்வொருவரும் இவ் இருகுரவர்களும் மகிமைப்படுத்தப்பட மன்றாடுவோமாக! எமது நாட்டுக்கும் இவர்களால் பெருமையும், நிறை ஆசிரும் கிடைக்கும். புனிதர் பட்டம் கொடுக்க அதிகாரம் கிடைத்தால் எம் பாப்பரசர் இலங்கைக்கு வந்து அச்சடங்குகளை நிறைவேற்றுவார். தாம் இலங்கைக்கு வந்தால் யாழ்ப்பாணம், மடுமாதா திருச்சேத்திரங்களையும் தரிசிக்க ஆவலாயிருப்பதாக அருட்திரு. பற்றிக் அடிகள் மூலம் கூறியுள்ளார் என்பதை வாசகர்கள் கவனிக்கவும்.

யோ. அ. ஆனந்தம்.

## குருத்கள்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் அறிவுரீதியாக வளர்ச்சி அடைந்த அளவிற்கு, உள்ளன்பு நிறைந்த உணர்வு ரீதியாக முதிர்ச்சி அடையவில்லை. உள்ளன்பு கொண்ட உணர்வு சார்ந்த நிலையில் ஏற்படுகின்ற ஆழமான உறவுகளும்/ தொடர்புகளும், அதனால் சந்திக்கின்ற உயரிய மனித அநுபவங்களும், குருத்துவ துறவற உருவாக்கற்பயிற்சியில் உள்ளடக்கப்படவேண்டும் என்றும்; இதை முன்னிட்டு கருத்துக்களும், பயிற்சிக்களங்களும் நெறிப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஏகோபித்த கருத்து ஒரு தீர்மானமாக முன்வைக்கப்பட்டு இக்கருத்தரங்கு நிறைவு பெற்றது.



மார்ச்: 4

புனித கசிமீர் (1458-1484)

இவர் அரசகுமாரனாக இருந்த போதிலும் சுகபோகங்களை வெறுத்து, ஒறுத்தல் முயற்சிகளை நேசித்தார். அனைவரையும் தமக்குச் சமமானவர்களாக மதித்தார். திருப்பலி, திவ்வியநன்மை, இயேசுவின் பாடுகள், கடவுளின் கன்னித்தாய் இவர்கள் மீது அதிக பக்தி உடையவர். பரிசுத்த கற்பை இழப்பதை விட சாக விரும்புகிறேன் என்பார்.

மார்ச் – 5

புனித சிலுவை ஜாண்ஜோசப் (1654 – 1734)

இவர் இளம் வயதிலிருந்தே கிறிஸ்தவ புண்ணியங்களை சிறந்த விதமாக அனுசரித்து வந்தார். இவர் குருப்பட்டம் பெற விரும்பாவிட்டாலும், பெரியவர்களுக்குக்கீழ்ப்படிந்து குருப்பட்டம் பெற்றார். கடவுளின் கிருபையால் புதுமையாக அநேக காரியங்களை அறியவந்தார். நடக்கப்போபவைகளை முன் கூட்டியே அறிவிக்கும் வரம்பெற்றார். சந்நியாசிகள் செபத்தியானத்தையும், தவத்தையும் நேசிக்கச் செய்தார்.

மார்ச் - 6

முத்திப் பேறுபெற்ற என்ரி சூசோ (1295 – 1366)

இவர் 13 வயதில் சந்நியாசியானார். வேதம் போதிப்பதில் புகழ்பெற்றவர். தனிநபர்களைப் புண்ணிய பாதையில் நடத்துவதில் சிறந்து விளங்கினார். பாடுபட்ட இயேசுவையும், தேவதாயையும் மிகவும் நேசித்து, தனக்கு வந்த நோயையும், துன்பங்களையும் பொறுமையோடு சகித்து வந்தார்.

## மரண ஞாபக அறிவித்தல்

மார்ச் – 6

அருட். சகோ. R. L. றொபேட். (S. S. J.)
1 ஆம் ஆண்டுநினைவுத் திருப்பலி
ஊறணி, புனித அந்தோனியார் ஆலயம், மாலை 5.00

மார்ச் 16

மரியாம்பிள்ளை சோதிநாதன்
5ஆம் வருட நினைவுத்திருப்பலி
உரும்பிராய், புனித மிக்கேல் ஆலயம். மாலை 6.00 மணி
A/46

மார்ச் – 18

திரு. E. பாக்கியநாதன்
7ஆம் ஆண்டு நினைவாஞ்சலி
"உயிர்ப்பும், உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
திருமதி பாக்கியநாதன். A/43

## விற்பனைக்கு உண்டு

தவக்காலத்திற்கேற்ற செபப்புத்தகங்களும் பசாம் புத்தகங்களும், ஒப்பாரிப் புத்தகங்களும், பசாம் ஒலிப்பதிவு நாடாக்களும் விற்பனைக்குண்டு.

புனித சிந்தாத்திரைமாதா செபமாலை ஸ்ரோர்ஸ்,
140, சுருவில் வீதி, கரம்பொன், ஊர்காவற்றுறை.
கிளை, A : 3, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.

## 31-ம் நாள் நினைவு



செ. பிரான்சிஸ் ராசையா
கூஞ்ஞ

மலர்வு: 20–8–1924 உதிர்வு: 31–01–1990

இரக்கமுள்ள இறைவா!

துன்பம் நிறைந்த இவ்வுலகில் நின்று உம்மால் பேரின்ப மகிமைக்கு அழைத்துக் கொள்ளப்பட்ட திரு. பிரான்சிஸ் இராசையா கூஞ்ஞ அவர்களது ஆன்மாவுக்கு நித்திய வாழ்வையும். முடிவில்லாத ஒளியையும் கொடுத்தருளும்.

இவரது ஆன்ம சாந்திக்காக 1990-03-02 ஆம்திகதி (வெள்ளிக்கிழமை) மாலை 5-30 மணிக்கு தலைமன்னார் மேற்கு புனித லோறன்ஸ் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்: பேரப்பிள்ளைகள்
A/14

## இறையியல் கல்வி வகுப்புகள்- பொதுநிலையினருக்கு

பொதுநிலையினரின் வளர்ச்சிக்கு அத்தியாவசியம் என நீண்டகாலம் உணரப்பட்ட தேவையாகிய இறையியல் கல்வியை எமது தேவைக்கும், வசதிக்கும் ஏற்ப தந்துதவ சவேரியார் குருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்கள் சம்மதித்துள்ளனர் என்பதை யாழ் மறைவட்டப் பொதுநிலையினர் கழகம் மகிழ்வுடன் அறியத்தருகிறது.

இவ்வகுப்புகள் வாராந்தம் ½நாள் அல்லது மாதாந்தம் இரு தொடர் நாட்களுக்கு (தங்குமிட வசதியுடன்) ஒருவருட காலத்துக்கு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ மறையின் அறிவுக்குரிய பல பகுதிகள் கையாளப்படவுள்ளன.

அநேகர் இவ்விடத்தில் ஆர்வம்காட்டியுள்ளபடியினால் விண்ணப்பங்கள் பெறப்பட்டு தெரிவின் மூலமே அனுமதி வழங்கப்படவுள்ளது.

ரூபா 100/= வைப்புப்பணமாக தெரிவு அறிவிக்கப்பட்ட 2 வாரங்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும். இது சான்றிதழ் பெறத் தகுதியானோருக்கு மீளளிக்கப்படும்.

விண்ணப்பங்கள் 20-3-90க்கு முன் கீழ்க்காணும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

தேவையான விபரங்கள்:- முழுப்பெயர், பிறந்த திகதி, சொந்த முகவரி, தொழில், பங்கு, கல்வித்தகமை, சமய ஈடுபாடு, பிறஈடுபாடு முதலியன.

முகவரி: அ. சந்தியாப்பிள்ளை
117, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# சமகால நிகழ்வுகள் குறித்து இலங்கை ஆயர்கள் கருத்து

இலங்கை ஆயர்கள் இவ்வாண்டு தவக்காலத்துக்கெனத் தந்துள்ள கருத்து ''நீதியைக்கடைப்பிடியுங்கள், மனித உயிரைப் பேணுங்கள்''

நாட்டின் இன்றைய நிலையில் உயிரின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் இச்செய்தி சென்ற இரு ஆண்டுகளின் செய்தியை ஒத்ததாகும்.

1989க்குப் பின் இது தவக்காலத்துக்கு மட்டும் உரிய திட்டமாக இராது தொடர்ந்து நடைபெற வேண்டிய திட்டமாக இருக்கிறது.

பிதா ஜோ பெர்னான்டோவின் உதவியுடன் எழுதப்பட்ட தவக்கால வழிபாட்டு ஏட்டில் வேதாகம வாசகம், சமகால நிகழ்வுகள் குறித்து குழுத்தியானம், அண்மையில் ஆயர் பேரவை வெளியிட்ட செய்திகளிலிருந்து சில பகுதிகள், ஐ. நா. சபையின் மனித உரிமைகள்பற்றிய ஏடுகள் ஆகியவற்றிலிருந்து சில பகுதிகள் தரப்பட்டுள்ளன.

## பத்தாண்டு நிகழ்ச்சிநிரல்

1557இல் திருத்தந்தை 4ஆம் சின்னப்பரால் நிறுவப்பட்ட கொச்சின் மறைவட்டம் தென் இந்தியா, இலங்கை ஆகியவற்றை அடக்கியதாயிருந்தது.

கேரளத் திருச்சபை கிறிஸ்து சகாப்தத்தின் 2000 ஆண்டு நிறைவையும், இந்தியாவுக்கு போர்த்துக்கேய மறைபரப்பாளர் வருகையின் ஐந்து நூற்றாண்டு நிறைவையும் கொண்டாட பத்தாண்டு நிகழ்ச்சி நிரல் ஒன்றை வகுத்துள்ளது.

முதல் பிரான்ஸிஸ்கன் சபை நிறுவப்பட்ட கொச்சின் நகரில் ஆயர் ஜோசவ் குறீதரா இதனை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

2000வது ஆண்டில் இறுதி விழா நடைபெறும்வரை ஆண்டுதோறும் மறைவட்டத்தின் ஆன்மீக, சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான பல நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

போர்த்துக்கலிலும் இவ்விழா கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

## வாழ்வகத்தில் ஒன்றிப்புவிழா

யாழ் ''மனித முன்னேற்ற நடுநிலையத்தின்'' ஆதரவினால், மலையகத்தைச் சேர்ந்த மக்களுக்கென உருவாக்கிய வாழ்வகம் என்ற சிறு கிராமம் இளவாலை சேந்தாங்குளம் பகுதியில் அமைந்துள்ளது.

தைத்திங்கள் 21ஆம் நாள் மாலை 5.00 மணிக்கு பங்குத்தந்தை அருள்திரு மைக்கல் T. பற்றிக் அடிகளார் தலைமையில் இங்கு ஒரு ஒன்றிப்பு விழா கொண்டாடப்பட்டது.

இவர்களின் முன்னேற்றங்களை ஊக்குவிப்பதற்காக, இளவாலை புனித யாகப்பர் இளைஞர் மன்றத்தினரும், புனித ஆனாள் பங்கு இளைஞர் யுவதிகளும் கலை நிகழ்ச்சிகளை மேடை ஏற்றினர்.

''மக்கள் எங்கிருந்தாலும் அவர்கள் வாழவேண்டியவர்கள், வளரவேண்டியவர்கள். அவர்களுக்கு உணவு, உறைவிடம் கொடுத்தால் மட்டும் போதாது, அவர்கள் உள்ளம் மகிழ கலை நிகழ்ச்சிகளும் அவசியம்'' என பங்குத்தந்தை தமது கருத்தைத் தெரிவித்தார்.

தகவல்:- லியோ பவுல்

### பாஸ்கா சிறப்பிதழ்

சிறப்பிதழுக்கான உங்கள் ஆக்கங்களை பங்குனி 30 இற்கு முன் அனுப்பி வையுங்கள்.

(ஆ-ர்)

## திருத்தந்தையின் அடுத்த பயணம்

வருகின்ற சித்திரை 22ஆம் நாள் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் தனது செக்கொஸ்லேவேக்கியாப் பயணத்தின் போது புனிதர்கள் சிறில், மற்றும் மெதடிஸ்ட் ஆகியோர் விசுவாசத்தைப் பறைசாற்றிய இடமும் பழைமையான திருத்தலமுமாகிய வெலரிடாவில் நடைபெறவிருக்கிற முக்கிய சமயக் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பதோடு, அங்கே திறந்த வெளித் திருப்பலியும் நிறைவேற்றுவார்.

இக் கூட்டத்தில் செக்கொஸ்லேவாக்கியா, போலந்து, ஆசியா மற்றும் ஹங்கேரியிலிருந்தும் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட விசுவாசிகள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 1949 க்குப் பின் மீண்டும் நல்லுறவு

செக்கொஸ்லேவேக்கியாவிற்கும், வத்திக்கானுக்குமிடையே 1949ஆம் ஆண்டில் முறிந்த அரசியல் உறவு 1990 ஏப்பிரலில் திருத்தந்தையின் செக்கொஸ்லேவேக்கியப் பயணத்திற்கு முன் மீண்டும் புதுப்பிக்கப்படும் என செக்கொஸ்லேவேக்கியாவிற்கு 5 நாள் பயணம் மேற்கொண்டு திரும்பிய பேராயர் பிரான்சிஸ்கோ கொலசுனோ அறிவித்தார்.

## ஆயரின் தீர்ப்பு செல்லுபடியற்றதாயிற்று

கேரள ஆயர் ஒருவர் தமது குருக்களுள் ஒருவரது பணிகளை நிறுத்தி வைக்கும் உத்தரவை கீழைத் திருச்சபைகளுக்கான பேராயம் செல்லுபடியற்றதாக்கிவிட்டது. பாலை மறைமாவட்ட ஆயர் பள்ளிகாபரம்பில் நக்சலைற் கூட்டங்களுக்கு சமூகமளித்தமைக்காக பிதா செபஸ்தியன் கீழகேக்குட்டு என்பவரை அவரது பதவியிலிருந்து நீக்கியது மட்டுமல்லாது அவரது பணிகளையும் நிறுத்திவைத்தார்.

இதை எதிர்த்து குருக்களிடையிலும், மக்களிடையிலும் கிளர்ச்சி ஏற்பட்டது. கீழைத் திருச்சபைகளுக்கான பேராயத்தின் தலைவர் கருதினால் லூர்துசாமி பணிகளை நிறுத்திய தடையுத்தரவை நீக்கிய போது பிதா செபஸ்தியனது செயல் அவரது குருத்துவப் பணி சார்ந்தது எனக்குறிப்பிட்டார். ஆனால் ஆயரின் ஏனைய உத்தரவுகளை அவர் ரத்துச் செய்யவில்லை.

### சிலுவைப்பாதை

நூல் வடிவில் அமைக்கத்தக்க சிலுவைப்பாதைச் சிந்தனைகள் அடுத்த இதழில் வெளிவரும்.

### தவக்காலச்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் கவனத்தை [illegible] ஈர்த்துள்ளதாகவும், அனைத்துலக அரசியல் தலைவர்களும், திருச்சபைத் தலைவர்களும் கவலைக்கிடமான அகதிகளின் பிரச்சனைகளுக்குத்தீர்வுகாண முன்வர வேண்டுமெனவும், அகதிகளுக்கும் குடும்பங்களை அமைக்கவும், போதிய உணவு உடை உறைவிடம் மற்றும் சுகாதார வசதிகளைப் பெறவும் உரிமை உண்டு என்ற உண்மையை அனைத்து நாடுகளும் உணரவும், மதிக்கவும் வேண்டுமெனவும் திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.

## கியூபாவில் நல்லுறவு

கியூபாத் தலைவர் பிடல் கஸ்ரோவின் அழைப்பை ஏற்று 1991ல் நடைபெறவிருக்கும் திருத்தந்தையின் கியூபாப் பயண ஏற்பாடுகள் குறித்துப் பேச கியூபா ஆயர்கள் ஹவானாவில் கூடினர்.

இக் கூட்டத்தில் கியூபா ஆயர் பேரவைத் தலைவர் ஹவானாப் பேராயர் ஜன் உத்தேகா மற்றும் திருத்தந்தை தூதுவர் ஆயர் வியூஸ் வினா சைனஸ் உட்பட 7 கத்தோலிக்க ஆயர்கள் கலந்து கொண்டனர்.

அண்மையில் கியூபாவிற்கு வருகை தந்த திருச்சபை பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது கியூபாவின் கம்யூனிச அரசிற்கும், திருச்சபைக்குமிடையே சிறிது சிறிதாக வளர்ந்து வரும் ஒரு நல்லுறவின் ஒரு அடையாளமுமாகும், என கியூபா அரசுத் தலைவர்களும், கியூபா திருச்சபைத் தலைவர்களும் கருத்து தெரிவித்துள்ளனர்.

## அன்னையின் பக்தர்கள்

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள சரித்திரப் புகழ் பெற்ற மாந்தை லூர்து அன்னையின் திருவிழா பல வருடங்களின் பின் பல ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்ற சிறப்பாக கொண்டாடப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேன்மை மிகு தோமஸ் சவுந்தரநாயகம் மாந்தை வாழ் மக்களுடன் சேர்ந்து ஏனைய பல இடங்களிலிருந்து யாத்திரையாக வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு விழாத் திருப்பலியை நிறைவேற்றினார். அருள்திரு. நோபேட் அடிகளும் மற்றும் ஏனைய குருக்களும் துறவிகளும் கூட்டுத் திருப்பலியில் பங்கு பற்றினர்.

ஆயரவர்கள் தமது அருளுரையில் ''பிரான்ஸ் தேசத்திலுள்ள லூர்து கெபியில் பல மக்கள் சென்று தப, செப, ஒறுத்தல் முயற்சிகளை செய்து வருகின்றார்கள். அன்னை பெர்னதெத் என்னும் சிறுமிக்கு காட்சி கொடுத்து இங்குள்ள மக்களும் அன்னையின் பக்தர்களாக தப, செப ஒறுத்தல் முயற்சிகளில் அதிக பற்றுள்ளவர்களாக வாழ அழைத்துள்ளார் என்றார்.

அன்று மாலை 4,00 மணியளவில் அன்னையின் திருச்சுரூபப் பவனி இடம்பெற்றது. மாந்தை கிராமம் முழுவதும் அலங்கரிக்கப்பட்டு, மாந்தைகிராமம் முழுவதையும் இப்பவனி சுற்றி வந்தது.

தகவல்:- ப. ஞானராஜ்
மடுமாதா சிறிய குருமடம்
மன்னார்.

## ஆயர்களின் 10 ஆண்டு சமாதானத்திட்டம்

பிலிப்பைன் ஆயர் பேரவை தமது சுற்றுமடலொன்றில் 10 அம்ச சமாதானத் திட்டமொன்றை முன்வைத்துள்ளது. அதில் அந்நியநாட்டுத் தலையீடுகளையும், திடீர் அரசியல் புரட்சிகளையும் கண்டித்து, அடுத்த 10 ஆண்டுகளாக நீதி, அன்பு, ஒப்புரவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகைகளைக் கூறுகின்றது.

இறை மதிப்பீடுகளைக் கடைப்பிடிப்பதும், சிலருக்கு சாதகமாகவும், பெரும்பான்மையினருக்குப் பாதகமாகவும் உள்ள அமைப்புகளை ஒழித்தல், தேசிய அரசுக்கு முழு ஆதரவு அளிப்பதுடன் பல்வேறு குழுக்களின் பிரச்சினைகளை சமாதான முறையில் தீர்த்து வைப்பது விவசாய, பொருளாதார, சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை புனரமைப்புச் செய்வது, நாட்டிற்கேற்ற கல்வித் திட்டமொன்றை வகுப்பது முதலியன பேரவை முன்வைத்த அம்சங்களுட் சிலவாகும்.

## நன்றி நவிலல்

தாளையடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஸ்ரனிஸ்லாஸ் இராசையா, அன்னம்மா தம்பதிகளின் மூதற் புதல்வி மெரிசிஆஞ்சலா கார்மேல் சபைக் கன்னியர் அவர்களது அர்ப்பணவாழ்வின் 25 வது ஆண்டு நினைவாக தை 13 ஆம் திகதி முருங்கன் கிறிஸ்துராஜா ஆலயத்திலும் மாசி 10 ஆம் திகதி அந்தோனியார் ஆலயத்திலும் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டது. அதில் கலந்து கொண்ட மேதகு ஆயர் இயோகுப்பிள்ளை ஆண்டகை, குருக்கள், கன்னியர் அவர்கட்கும் பங்குத்தந்தை செபஸ்ரியான் அவர்கட்கும் வெள்ளி விழாவில் கலந்துகொண்ட பங்குமக்கள் சமூகம் அளித்த அனைவருக்கும் எமது நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

செல்வி பி. பிரான்சிஸ்கா

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைமீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்